
பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | வைகாசி 20 | சனிக்கிழமை | 03.06.2023 | கதிர் 205

# கஜேந்திரகுமார் எம்.பி. மீதான தாக்குதல் இன ஒடுக்குமுறையின் தெளிவான சான்று

## சித்தார்த்தன் எம்.பி. கண்டனம்



தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சாதாரண பொலிஸாரால் தாக்கப்படுவதும் அப்படித் தாக்கியவர்களை அதிகாரிகள் பாதுகாப்பதும் இலங்கைத்தீவின் இன ஒடுக்குமுறைக்கு மேலுமொரு தெளிவான சான்றாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் புளொட் அமைப்பின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்.

யாழ். மாவட்டம், வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் நேற்றுப் பகல் அரசியல் சந்திப்புக்காகச் சென்ற முன்னிணியின் தலைவர் கஜேந்திரகுமார் மீது அரச புலனாய்வாளர்கள் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டவர்களால் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பிரஸ்ரல் காட்டி மிரட்டப்பபட்டதாகவும் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

இலங்கையில் ஜனாதிபதிப் பதவியை ஒரு கட்சியும் நாடாளுமன்றப் பெரும்பான்மையை ஒரு கட்சியும் கொண்டு நடந்த ஆட்சி எதுவும் சீராக நீண்டு சென்றதாகச் சரித்திரம் இல்லை. சந்திரிகா - ரணில், மைத்திரி - ரணில் என்று இரு கட்சி கூட்டு ஆட்சி முறையில் தேனிலவுக் காலம் முடிந்ததும் சண்டைகள் சச்சரவுகள் மிக இயல்பாகவிடுடம். கடைசியில் எப்படியும் விவாகரத்தும் ஆகிவிடும். இப்போது ரணில் - மொட்டுக் கட்சி ஆட்சியும் அந்தக் கட்டத்திற்கு வந்துவிட்டன. அதாவது தேன்னிலவு முடிந்து சண்டைகளின் தொடக்கத்திற்கு வந்துள்ளன.

இதன் அறிகுறியைக் கடந்த ☞ 2

## வாள்வெட்டு கும்பல் கைது

யாழ். நகரில் அண்மையில் இரவு வேளை பழரசக் கடை உரிமையாளரை வாளால் வெட்டிக்காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்கள் யாழ் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் மேனன் தலைமையிலான அணியினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களால் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 19 மற்றும் 20 வயதுடையவர்கள். கொக்குவில் மற்றும் சுதுமலை பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

வண்ணார்பண்ணைச் சிவன் கோயில் முன்பாக உள்ள பழரசக் ☞ 2

## கஜேந்திரகுமார் எம்.பி. நோக்கி நீண்டிருக்கும் ஆயுதமுனை நாட்டின் அதியுச்ச அடக்குமுறை

### சிவஞானம் சிறீதரன் எம்.பி கண்டனம்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை மருதங்கேணிப் பகுதியில், பொதுமக்கள் முன்னிலையில் அரச புலனாய்வாளர்கள் ஆயுதமுனையில் அச்சுறுத்தியமை இந்த நாட்டின் அதியுச்ச அடக்குமுறையையே காட்டி நிற்கிறது.

இவ்வாறு கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த நாட்டின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் மீது ஆயுதமுனையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த அச்சுறுத்தலானது, சாதாரண தமிழ்மக்களின் இயல்புவாழ்வில் இராணுவம் மற்றும் அரச புலனாய்வாளர்களால் எத்தகைய அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடும் என்பதை மிகத் தெளிவாகக் காட்டியிருக்கிறது.

மக்கள் பிரதிநிதியான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குரிய சிறப்புரிமையை மீறி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ள



இக் கொலைமுயற்சியில் ஈடுபட்டவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்துவதோடு, இச்சம்பவத்திற்கு எனது வன்மையான கண்டனங்களையும் பதிவு செய்கிறேன் - என்றுள்ளது.

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை திருத்த மன்னிப்புச் சபை கடிதம்

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்களை உள்ளடக்கிய கடிதமொன்றை நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக் வுக்கு சர்வதேச மன்னிப்புச்சபை அனுப்பி வைத்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை யின் தெற்காசியப் பிராந்தியப் பிரதிப்பணிப்பாளர் ஸ்மிரிதி சிங்கினால் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

ஆட்சியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மிகுந்த கரிசனைகளைத் தோற்றுவித்துள்ளது.

இச்சட்டமூலமானது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு மனித உரிமைகளின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது.

அது மாத்திரமன்றி இச்சட்டமூலம் இலங்கை அரசமைப்பின் ஊடாக மக்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணானதாகவும் காணப்படுகின்றது.

இச்சட்டத்தின் கீழ் பயங்கரவாதக் குற்றமாகக் கருதப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் உரியவாறானதும் தெளிவானதுமான வரைவிலக்கணம் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் அரச பாதுகாப்பு அதிகாரிகள் வசம் மட்டுமீறிய அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இச்சட்டவரைபைத் தயாரித்தவர்கள் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நிபுணர்களால் முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கும் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு அமைவாகவும் இதனைத் தயாரிக்கவில்லை.

எனவே சர்வதேச சட்டத்தின் கீழ் இலங்கை கொண்டிருக்கும் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்யவேண்டுமெனில் இச்சட்டமூலத்தில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றே நாம் கருதுகின்றோம்.

அதன்படி குறிப்பாக உத்தேச பயங்கரவாதச்சட்டமூலத்தில் பயங்கரவாதம் என்ற பதத்துக்கு விரிவான வரைவிலக்கணம் வழங்கப்பட்டிருப்பதுடன் அதன் கீழ் பல்வேறு குற்றங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று சந்தேகநபரை குற்றச்சாட்டுக்களின்றி ஒரு வருடகாலம் வரை தடுப்புக்காவலில் வைக்கமுடியும் என்பதுடன் ☞ 2

## ஊடகப் பிரதானிகளுடன் ஜூன் 7 நீதி அமைச்சர் பேச்சு

### ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்ட மூலம் பற்றி

ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தொடர்பில் ஊடகப் பிரதானிகளுடன் ஜூன் 7 கலந்துரையாடவுள்ளதாக நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதி அமைச்சில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டம் கொண்டுவரப்படுவதற்கான முன்மொழிவினை ஊடக அமைச்சே முன்வைத்தது. அதற்கு அமைவாக, எனது தலைமையில் வரைவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

தற்போதைய நிலையில் நாட்டில் ஒளிபரப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிகள் தற்காலிகமானவையே. அந்த அனுமதிகளை எப்போது வேண்டுமானாலும் இரத்துச் செய்ய முடியும். அந்த அனுமதிகள் கொள்கை அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

ஆகவே, ஒளிபரப்பு ஊடகங்களுக்கு நிரந்தரமான அனுமதிகளை வழங்கும் அதேநேரம், நிரந்தமான கொள்கை அடிப்படையில் தரமொன்றை ☞ 2

## பொலிஸ் ஆளணியை அதிகரிக்க அமைச்சர் டக்ளஸ் உதவவேண்டும்

### யாழ்ப்பாண அதிகாரிகள் கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸாருக்கு ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாக தெரிவித்த பொலிஸ் அதிகாரிகள், ஆளணியை அதிகரிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

புதன்கிழமை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரம் ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்தில் குற்ற செயல்கள் அதிகரித்து இருப்பதாக தெரிவித்த பிரதேச செயலர்கள் அதனை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதன் போது கருத்து தெரிவித்த பொலிஸ் அதிகாரிகள் பல இடங்களில் பொலிஸ் ஆளணிப் பற்றாக்குறை இருப்பதை சுட்டிக்காட்டியதுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொலிஸ் ஆளணியை அதிகரிப்பதற்கு தனது தனிப்பட்ட செல்வாக்கை பயன்படுத்த வேண்டும் என கோரிக்கையும் விடுத்தனர்.

பதிலளித்த அமைச்சர் ☞ 2

## நாட்டின் பொருளாதார மீட்சி தொடர்ந்தும் பெரும் சவால்

### நாணய நிதியப் பிரதிநிதி சுட்டிக்காட்டு

இலங்கையின் பொருளாதார மீட்சி என்பது தொடர்ந்தும் சவாலான விடயமாகவே காணப்படுகின்றது என்று சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கென்ஜி ஒகமுரா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பயணத்தை நிறைவு செய்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கென்ஜி ஒகமுரா வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

எனது பயணத்தின்போது, பொருளாதார உறுதிப்பாட்டை மீள எட்டுவதற்கான நிதி நடவடிக்கைகள், வருமான வழிமுறைகளின் முக்கியத்துவம் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

உரிய நேரத்திலும் வெளிப்படைத்தன்மையுடனும் கடனைப் பெறுவதற்கான உத்திகளைப் ☞ 2

## மத அவமதிப்புக்கு 10 ஆண்டுகள் சிறை

### எச்சரிக்கிறார் ஜனாதிபதி சட்டத்தரணி டி சில்வா

ஆகவே மதங்களை அவமதிக்கும் கருத்துக்களை இனியொருபோதும் அலட்சியப்படுத்த கூடாது. ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தால் பத்து ஆண்டுகள் சிறை செல்லநேரிடும் என ஜனாதிபதி சட்டத்தரணி யு.ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கருத்து சுதந்திரம் உள்ள காரணத்திற்காக மதங்களையும், தனிப்பட்ட நபர்களையும் அவமதிக்க முடியாது. அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள கருத்து சுதந்திரம், பேச்சு சுதந்திரம் ஆகியவற்றை ஒருதரப்பினர் தவறாக பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

கருத்து சுதந்திரம் பற்றி தற்போது வாதப்பிரதிவாதங்களை முன்னெடுப்பவர்கள் உரிமை, சுதந்திரம் ஆகியற்றுக்கான ☞ 2

## நடாஷாவின் கைது போன்றவற்றால் சட்டத்தின் ஆட்சியைச் சீர்குலையாதீர்

### மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தெரிவிப்பு

நகைச்சுவை தனிநிலைக் கலைஞர் (ஸ்டான்டப் கொமேடியன்)) நடாஷா எதிரிசூரியவின் கைது போன்ற நடவடிக்கைகள் மூலம் நாட்டில் சமாதானத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் சீர்குலைக்கவேண்டாம் என்று ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தியுள்ளது மாற்றுக் கொள்கைகளுக்கான மையம்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டத்தின் கீழ் அண்மைக்காலங்களில் இடம்பெறும் கைதுகள் மற்றும் அதன் விளைவாகக் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பில் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மையில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச்சட்டத்தின் கீழ் நகைச்சுவைப்பேச்சாளர் நடாா எதிரிசூரிய கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் எமது தீவிர கரிசனையை வெளிப்படுத்துகின்றோம். மத ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தல் என்ற போர்வையில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்கான புதியதொரு உத்தியே இதுவாகும்.

அண்மையகாலங்களில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டத்தின் கீழ் இந்தக் கைது மாத்திரம் இடம்பெறவில்லை என்பதையும் மத மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும், தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களை வெளியிட்டதாகக்கூறி மேலும் பலர் கைதுசெய்யப்பட்டனர் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

அதுமாத்திரமன்றி நடாஷா எதிரிசூரியவின் நகைச்சுவை நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட ☞ 2

## ஆட்சிக்கு எதிராக

## ஐ.நா. பேரவைத் தலையீட்டை வலியுறுத்தி மனு கையளிப்பு

ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை உறுதிப்படுத்துவதற்கு ஆட்சியாளர்கள் தீவிரமாக முயற்சித்துக்கொண்டு இருக்கும் நிலையில் ஐக்கிய நாடுகள் சபை உடனடியாகத் தலையீடு செய்யுமாறு மக்கள் போராட்ட பிரஜைகள் அமைப்பு மனுவை கொழும்பில் உள்ள ஐ.நா. வதிவிட அலுவலகத்தில் கையளித்துள்ளது.

மனுவைக் கையளித்ததன் பின்னர் அந்த அமைப்பின் பிரதம செயலாளர் சானக பண்டார செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இந்த நாட்டு மக்களின் ஜனநாயகத்தினை ஒடுக்குவதற்காக ஆட்சியாளர் நீதி அமைச்சர் விஜதாச ராஜபக்ஷவுடன் இணைந்து ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக முழுமையான தலையீட்டினைச் செய்ய வேண்டும்.

நாட்டுமக்கள் ஊடகங்கள் ஊடாகவே தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றார்கள். இந்த நிலையில் ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை ஸ்தாபித்து மக்களின் ஜனநாயகத்தினை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வாரம் தெளிவாகக் காண முடிந்தது. அரச நிதிக்குழுத் தலைவரை நாடாளுமன்றத்தில் நியமிப்பது தொடர்பில் இழுபறி நிலை நீடிக்கின்றது. அந்தப் பதவி எதிர்க் கட்சிக்கு வழங்கப்படவேண்டும் என்று நிலையியற் கட்டளை கூறுகின்றது. அதன்படி அந்த இடத்திற்கு தமது பொருளாதார நிபுணரான கலாநிதி ஹர்ஷ டி சில்வாவை நியமிக்கும்படி கேட்கிறது எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி. ஆனால் அதில் ஆளும் தரப்புக்கு உடன்பாடில்லை.

இதனால் முதலில் எதிர்க் கட்சியிலிருந்த மயந்த ததிஸநாயக்கவை அந்தப் பதவிக்கு நியமித்தது. எதிர்க் கட்சிகள் எல்லாம் இணைந்து அந்த நியமனத்தை எதிர்த்தன. மயந்தவை பதவி விலக வலியுறுத்தின. அவ ரும் பதவி விலகினார். அது முதல் அவ்வப்போது தற் காலிகத் தலைமையை நியமித்துக் குழுவின் செயற்பாடு கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

இதற்கொரு முடிவு கட்டும் வகையில் இது தொடர்பில் இணக்கப்பாடொன்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்துவதைப்போன்றே ஹர் டி சில்வாவுக்கே அந்தப் பதவியைக் கொடுப்பது என்று அதில் தீர்மமானிக்கப்பட்டது. கிட்டத்தட்ட எல்லா விடயங்களும் பேசி முடிக்கப்பட்டன. இத்தனைக்கும் ஆளும் தரப்பின் முக்கிய நபர்களான பிரதமர் டினேஸ் குணவர்த்தன, மொட்டுக் கட்சியின் கொறடா அர்ஜீன ரணதுங்க போன்ற பல முக்கிய புள்ளிகளையும் உடன் வைத்துக்கொண்டே இந்த இணக்கம் எட்டப்பட்டது.

அதன்படி கடந்த வாரம் நிதிக் குழு கூடியதும் ஹர்வை தலைவராகத் தேர்ந்தெடுத்த பின்னர் குழுவின் நவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதுஎன்றுதீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த நாள் வந்தபோது எல்லாமும் தலை கீழாகி இருந்தன. நிதிக் குழுக் கூட்டத்தில் ஹர்ஷவின் பெபயர் முன்மொழியப்பட்டபோது. உடனே மொட்டுக் கட்சி கொறடாவான அர்ஜீண ரணதுங்க அந்த நியமனத்தை எதிர்த்தார். எல்லோருக்கும் கடும் அதிர்ச்சி. அதற்கு முதல் நாளில்தான் ஜனாதிபதிக்கு முன்னாள் எல்லாவற்றுக்கும் ஆமாம் போட்டுக் கொண்டிருந்தார்கள், அதைவிடுத்து இப்போது எதிர்க்கிறார்களே என்று.

அதற்கு அர்ஜீண ஒரு விளக்கம் சொல்லியிருக்கிறார், ஜனாதிபதி வேறு ஆட்சி வேறு. ஆட்சி மொட்டுக் கட்சியினுடையது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை எங்களுடையது. அதனால் ஜனாதிபதி சொல்வதை நாம் கேட்கவேண்டிய அவசியம் ஏதுமில்லை. அவர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவருமில்லை. அதனால் இந்த நிதிக் குழுவுக்கு ஹர் நியமிக்கப்படுவதை எதிர்க்கிறோம் என்று கூறியிருக்கிறார். நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இது பற்றிக் கேள்வி எழுப்பியபோதும் ரணதுங்க அதனையேதான் அங்கும் சொன்னார்.

ஜனாதிபதிக்கும் ஆட்சிக்கும் இடையிலான உரசல் இது மட்டுமல்ல. ஜனாதிபதி ஜப்பான் சென்றுவிட்டு நாடு திரும்பியதும் செவ்வாய்க்கிழமை அவசரமாக ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அந்தக் கூட்டத்திற்கு அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பலர் என்று தெரிந்தெடுக்கப்பட்ட பலர் அழைக்கப்பட்டிருந்தனர். மொட்டுக் கட்சியான பொது ஜனபெரமுனவின் செயலாளர் சாகர காரியவாசமும் அதில் கலந்துகொண்டிருந்தார்.

அந்தக் கூட்டத்திற்கு மொட்டுக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களும் கூட அழைக்கப்பட்டிருந்தனர். இதைப் பார்த்ததும் சாகர கொந்தளித்தார். ஜனாதிபதிக்கு அமைச்சரவையைக் கூட்ட அதிகாரமிருக்கிறது, ஆட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் அல்லது மக்கள் பிரதிநிதிகளை அழைத்துக் கலந்துரையாடவும் அவரது பதவி வழி அவருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் மொட்டுக் கட்சிப் பிரதிநிதிகளை அழைப்பதற்கு எந்த அதிகாரமும் இல்லை என்றார் சாகர.

அந்தக் கூட்டத்திற்கு மொட்டுவில் இருந்து பிரிந்து சென்று சுதந்திர சபையாக இயங்கும் நாடாளுமன்ற உறுப்பினர் லன்ஸாவும் வந்திருந்தார். அவர் எழுந்து எல்லாக் கட்சிகளும் சேர்ந்த எப்படி ஆட்சியை முன்னெடுத்துச்செல்வது என்று ஆராய்வதற்காகத்தான் இந்தக் கூட்டம் அதில் மொட்டுக் கட்சியினரை அழைத்தால் என்ற தவறு என்று வாதிட்டார்.

அதற்கும் கோபத்துடனேயே பதிலளித்த சாகர, ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்கான பெரும்பான்மை மொட்டுக் கட்சியிடம் போதியளவில் இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலையில் எல்லோரும் சேர்ந்த ஆட்சியை முன்னெடுப்பது தொடர்பாகப் பேசுவதாயின் அது பற்றி முதலில் மொட்டுக் கட்சித் தலைமையுடன் மட்டுமே பேசவேண்டும் என்று பதிலடி கொடுத்தார்.

இப்படி ஐக்கிய தேசியக் கட்சி - பொது ஜன பெரமுன ஆட்சியின் தேனிலவு நாட்கள் தேயத் தொடங்கியிருக்கின்றன. விரைவிலேயே இது விவாகரத்தை நோக்கி நகரும் என்று காத்திருக்கிறார்கள் அரசியல் நோக்கரர்கள்.

- இடிமின்னல் -

## கஜேந்திரகுமார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இது தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது சிவில் உடையில் நின்ற பொலிஸார் தாக்குதல் நடத்தியதுடன், அநாகரிகமான வார்த்தைகளைப் பயன்படுத்தி திட்டியதுடன், துப்பாக்கியையும் நீட்டிமிரட்டல் விடுத்துள்ளனர்.

இலங்கை அரசமைப்பின்படி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குள்ள சிறப்புரிமைகளை மீறி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் செயற்பட்டுள்ளார்கள். இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் 70 வருடங்களுக்கு மேலாக நடத்தும் அரசியல் உரிமை போராட்டத்தின் நியாயத்தை மீளவும் ஒருமுறை உறுதி செய்துள்ளது இந்தச் சம்பவம் எனலாம்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கே பாதுகாப்பற்ற சூழ்நிலையும், மறுவளமாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அரசமைப்பு வழங்கிய சிறப்புரிமைகளை மீறி சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர்களே கொலை மிரட்டல் விடுவதும், அவர்களை அதிகாரிகள் பாதுகாப்பதும் இலங்கைத்தீவின் இன ஒடுக்குமுறைக்கு மேலுமொரு தெளிவான சான்றாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரின் சிறப்புரிமைகளை மீறியும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் உரிமைகளை மீறியும் பொலிஸார் நடந்து கொண்டது கண்டனத்துக்குரியது.

இந்தக் குற்றச்செயலில் ஈடுபட்ட பொலிஸார் உடனடியாகச் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது.

## வாள்வெட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கடைக்கு வந்த இவர்கள் அதன் உரிமையாளரையும் அங்கிருந்த மற்றொருவரையும் வாளால் வெட்டிக் காயப்படுத்தினர்.

கடையில் பழரசம் கேட்டனர் என்றும், கடையைப் பூட்டும் நேரமாகிவிட்டதால் பழரசம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டதால் ஆத்திரப்பட்டு அவர்களை வாளால் வெட்டினர் என்றும் சந்தேகநபர்கள் தெரிவித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் 6 பேர் பங்கேற்றிருந்தனர். தலைமறைவாகி உள்ள மேலும் மூவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

## பயங்கரவாத .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சட்டமா அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாக மேல்நீதிமன்றத்தினால் தடுப்புக்காவல் காலத்தை நீடிக்க முடியும் என்ற சரத்து இச்சட்ட-மூலத்தில் உள்ளடங்கியுள்ளது.

இப்புதிய சட்டமூலத்தின் ஊடாக இராணுவத்தினருக்கு மட்டுமீறிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அது மாத்திரமன்றி எந்தவொரு நபருக்கோ அல்லது அமைப்புக்கோ எதிராகத் தடைவிதிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவை உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினராலும் வெளிப்படுத்தப்பட்ட கரிசனைகளைக் கருத்திற்கொள்ளுமாறு வலியுறுத்து-வதுடன், பயங்கரவாதத்தை முறியடிக்கும் நோக்கில் புதிதாகக் கொண்டுவரப்படக்கூடிய எந்தவொரு சட்டமும் சர்வதேச சட்ட நியமங் களுக்கு அமைவாகக் காணப்படுவதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரயோகத்தை இடைநிறுத்துமாறும் வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது.

## ஊடகப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொண்டுவரும் வகையில் அமைய வேண்டும் என்றே ஊடக அமைச்சு அமைச்சரவையில் குறிப்பிட்டது.

அதற்கு அமைவாகவே தற்போது பிரேரணை அமைச்சரவை உபகுழுவால் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த உப குழுவில் நான், அமைச்சர் களான நிமல்சிறிபால டி சில்வா, பந்துலகுணவர்த்தன, கெஹலிய ரம்புக்வெல்ல, மனுநாணயக்கார ஆகியோர் பங்கேற்றிருந்தது. அத்துடன் தற்போது உருவாக்கப்பட்டிருப்பது சட்டமூலம் அல்ல. அதனை அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் வழங்கியுள்ளோம்.

இதுபற்றிய பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் எதிர்வரும் 7ஆம் திகதி அனைத்து ஊடகப் பிரதானிகளுடனும் கலந்துரையாடவுள்ளோம். அதற்காக நாடாளுமன்றத்தில் ஊடாகஊடகப்பிரதானிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளோம் - என்றார்.

## பொலிஸ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) டக்ளஸ் தேவானந்தா மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எனக்கு கடிதம் மூலம் ஒரு கோரிக்கையை விடுத்தால்தான் அதனை ஜனாதிபதியுடன் கதைத்து பொலிஸ் ஆளணியை அதிகரிப்பதற்குநடவடிக்கைஎடுக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் பிரதேச செயலர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## நாட்டின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பற்றியும் கலந்துரையாடுமாறு இலங்கை அதிகாரிகளை நான் ஊக்குவித்துள்ளேன்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தல், கடன் நிலைத்தன்மையை மீட்டெடுத்தல், நிதி ஸ்திரத்தன்மையை பாதுகாத்தல், நிர்வாகத்தை வலுப்படுத்தல், பாதிக்கப்படக் கூடியவர்களை பாதுகாத்தல் உள்ளிட்ட விடயங்கள் பொருளாதார மறுசீரமைப்பின் நோக்கமாகும்.

முன்னரைவிட இலங்கை அதிகாரிகள் இலங்கை மக்களின் வலுவான தீர்மானங்களின் கீழ் பொருளாதார மறுசீரமைப்பை தொடர வேண்டும்.

பொருளாதாரநெருக்கடி ஊடாக இலங்கை பயணிக்கும் போது நெருக்கடியால் அளவுக்கதிகமான விதத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஏழைகள் மற்றும் நலிவடைந்தவர்களை பாதுகாக்கவேண்டியது அவசியமாகும்.

நுண்பொருளாதாரத்தை உறுதிப்படுத்துதல், கடன் நிலைத்தன்மையை மீட்டெடுத்தல், நிதி உறுதிப் பாட்டைப் பாதுகாத்தல், ஆட்சி முறையை வலுப்படுத்துதல், நலிவடைந்தவர்களை பாதுகாத்தல் ஆகியனவே பொருளாதாரசீர்திருத்தத்தின் நோக்கமாகும்.

இலங்கையின் பொருளாதாரம் முன்னேற்றத்திற்கானதற்காலிகஅறிகுறிகளை காண்பிக்கின்றது. முக்கிய கொள்கைகளைநடைமுறைப் படுத்தியதன் காரணமாகவே இந்த நிலையேற்பட்டுள்ளது - என்றுள்ளது.

## மத ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வரைவிலக்கணத்தை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

பௌத்த மதத்துக்கு எதிரான கருத்துக்கள் அண்மைக் காலமாக தீவிரமடைந்து வருவதை அவதானிக்க முடியாது. பௌத்தர்களை வெறுப்படைய செய்து, மதங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் நோக்கத்துடன் ஒருதரப்பினர் முறையற்ற வகையில் செயற்படுகிறார்கள்.

நகைச்சுவைக்காக மதங்களையும் மத கோட்பாடுகளையும் எவ்வாறு அவமதிக்க முடியும். அவரவர் மதம் சார்ந்த விடயங்கள் உணர்வுபூர்வமானது.

பிறிதொரு மதத்தவர் தமது மதத்தை அவமதிப்பதை எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆகவே மதங்களை அவமதித்தால் சமூக கட்டமைப்பில் தேவையில்லாத முரண்பாடுகள் தோற்றம் பெறும்.

புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட போது உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை ஒருசில காரணிகளை முன்னிலைப்படுத்தி சிலை உடைப்பு விவகாரம் அலட்சியப்படுத்தப்பட்டதால் ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் ஊடாக பெரும் விளைவுகள் ஏற்பட்டன. ஆகவே மதகாரணிகளை ஒருபோதும் அலட்சியப்படுத்த முடியாது.

மதங்களை அவமதிக்கும் தரப்பினருக்கு எதிராக ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கைகளை எடுத்தால் பத்து ஆண்டுகள் நிச்சயம் சிறை செல்ல நேரிடும். இந்தச் சட்டத்தின் பிரகாரம் கைது செய்யப்படுபவர்களுக்கு பிணை வழங்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றத்துக்கு கிடையாது. மேன்முறையீட்டு நீதிமன்றத்திடமே பிணை பெற்றுக்கொள்ள முடியும். பேச்சு சுதந்திரம் உள்ளது என்ற காரணத்துக்காக விரும்பிய அனைத்தையும் குறிப்பிட முடியாது என்பதை சகலரும் விளங்கிக்கொள்ள வேண்டும் - என்றார்.

## நடாஷாவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விருப்பதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கான இடைவெளி சுருக்கமடைந்திருப்பதையும் அதன் மீதான மிகமோசமான தாக்கங்களையும் வெளிப்படுத்துகின்றது.

மேலும் மத ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் இலக்காகக்கொண்டு புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவிருப்பதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இருப்பினும் ஒடுக்குமு-றைகள் மற்றும் வன்முறைகளுடன் தொடர்புடைய குற்றவாளிகளைப் பொறுப்புக் கூறச்செய்யும் வகையில் அத்தகைய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமை கவலைக்குரிய விடயமாகும்.

இலங்கையின் கடந்த கால அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் மத ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்குஎதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுடன், அவர்கள் அரச கட்டமைப்புக்களுக்குப் பொறுப்பாகவும் நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் அடிப்படை உரிமைகளை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் மூலம் இலங்கையின் சமாதானத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் வலுவிழக்கச்செய்யவேண்டாம் என்று ஆட்சியாளர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தரைமட்டமாக்கும் செயற்பாட்டையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுகின்றார்.

ஹிட்லர், முசோ லினி போன்று ரணில் விக்கி ரமசிங்கவும் வரமுனைகின்றாரா என்ற கேள்வி எமக்குள்ளது. அத்துடன் அனைத்து ஊடகங்களையும் அடக்கு முறை கொள்கையூடாக கட்டுப்படுத்தி சர்வாதிகார ஆட்சியொன்றே ஸ்தாபிக்கப்படவுள்ளது என்றார்.













# பௌத்த மதத்தை விமர்சிக்கும் உரிமை எவருக்கும் கிடையாது

## மைத்திரிபால சிறிசேன இடித்துரைப்பு



பௌத்த மதத்தை விமர்சிக்கும் உரிமை இங்கு எவருக்கும் கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

பௌத்த மதத்தை விமர்சிக்கும் உரிமை இங்கு எவருக்கும் கிடையாது.

மொழிகளும் மதங்களும் வேறுபட்டாலும் ஒவ்வொரு மதங்களையும் மதிக்க மனிதர்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

இதன் ஊடாக அரசியல் செய்ய பலரும் முயற்சிக்கிறார்கள். கடந்த காலங்களில் எல்லாம் இதுபோன்ற பல வரலாறுகள் காணப்படுகின்றன.

என்னைப் பொறுத்தவரை மொழி அல்லது மத அடையாளம் கொண்ட அரசியற் கட்சிகளை பதிவு செய்வதை தடைசெய்யும் வகையில் அரசமைப்பில் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும்.

தேர்தல் ஆணைக்குழுவும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அப்போது மட்டுமே இவ்வாறான வெறுப்புப் பிரசாரங்களின் ஊடாக அரசியல் செய்யும் கலாசாரத்தை நாட்டிலிருந்து இல்லாது செய்ய முடியும்.

வெறுப்புப் பிரசாரங்களை செய்யும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து அடிப்படைவாதிகளால் நிதி அனுப்பப்படுகிறது.

இதனைக் கண்டறிந்து முதலில் அரசாங்கம் நிறுத்த வேண்டும். புலனாய்வுப்பிரிவினர் இதனைக் கண்டறிய வேண்டும்.

நல்லிணக்கம், ஜனநாயகம், மனிதாபிமானத்தை உறுதிப்படுத்தினாலேயே ஒரு நாட்டை முன்னேற்ற முடியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் குறிப்பிட்டார். (05)

# 18 வயது சகோதரியைக் கழுத்தறுத்து கொலை செய்த 25 வயது சகோதரன்!

## தங்கையின் காதல் விவகாரத்தால் ஆத்திரமுற்ற அண்ணன் வெறியாட்டம்

தங்கையின் காதல் விவகாரத்தை அறிந்து ஆத்திரமுற்ற அண்ணன், அவரைக் கத்தியால் வெட்டிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் கம்பஹா மாவட்டம், பியகமவில் நேற்று (01) மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பியகமவைச் சேர்ந்த எஸ்.ஹிருணிகா என்ற 18 வயது உயர்தர வகுப்பு மாணவி, அப்பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் காதலித்து வந்துள்ளார்.

இந்த விடயம் சில நாட்களுக்கு முன்னர் மாணவியின் வீட்டாருக்குத் தெரியவந்துள்ளது. இதையடுத்து ஆத்திரமுற்ற மாணவியின் மூத்த சகோதரன், தங்கையுடன் நேற்றுமுன்தினம் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு அவரை அடித்தும் துன்புறுத்தியுள்ளார்.

இந்தச் சித்திரவதையைத் தனது காதலனுக்குக் ஹிருணிகா தொலைபேசியூடாகத் தெரியப்படுத்தியுள்ளார். கடும் கோபமடைந்த ஹிருணிகாவின் காதலன், ஹிருணிகாவின் மூத்த சகோதரனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு தங்கள் காதலுக்கு எதிர்ப்புக் காட்ட வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், புதன்கிழமை மாலை மதுபோதையில் வீட்டுக்கு வந்த ஹிருணிகாவின் மூத்த சகோதரன், காதலுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்குமாறு சகோதரியை வற்புறுத்தியுள்ளார். அதற்கு அவர் உடன்படாத நிலையில், கத்தியால் அவரின் கழுத்தை அறுத்து வெறியாட்டம் புரிந்துள்ளார்.

இரத்த வெள்ளத்தில் கிடந்த ஹிருணிகாவை, அவரின் குடும்பத்தினர் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் அவரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் ஹிருணிகாவின் 25 வயதுடைய மூத்த சகோதரனையும், காதலனான 23 வயதுடைய இளைஞரையும் கைது செய்துள்ள பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அலி சப்ரி ரஹீம் தகுதியற்ற ஒருவர்

## மார்ச் 12 இயக்கம் தெரிவிப்பு

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்க தகுதியற்றவர் என சிவில் சமூக குழுவான மார்ச் 12 இயக்கம் நான்கு அம்ச அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அலி சப்ரி ரஹீம் தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கடந்த காலங்களில் ஊழல் மோசடியில் ஈடுபட்டிருந்தார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சட்டத்தின்படி நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக அதிகபட்ச தண்டனை அமுல்படுத்தப்படவில்லை என மார்ச் 12 இயக்கம் கவலை தெரிவித்துள்ளது.

அலி சப்ரி ரஹீக்கு எதிராக விசாரணை நடத்துமாறு பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், இந்த விடயம் தொடர்பில் சபாநாயகர் இன்னும் அறிக்கை வெளியிடவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காவிடின் சட்டங்களை மதிக்காத நாடாக இலங்கை அங்கீகரிக்கப்படும் என குறித்த இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (05)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் இழப்பீடு விவகாரம்: ஜனாதிபதி சட்டத்தரணி இருவர் ஆலோசகர்!

எக்ஸ் பிரஸ் கப்பலால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு இழப்பீடு பெறுவதற்காக சிங்கப்பூரில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இழப்பீட்டு வழக்கை ஆராய்வதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு உதவ ஜனாதிபதி சட்டத்தரணிகள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி ரோலண்ட் பெரேரா மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர ஆகியோரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையால் இவர்கள் நியமிக்கப்பட்டனர் என அதன் தலைவர் சட்டத்தரணி அசேல ரெக்கவ தெரிவித்தார்.

இது தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணிகள் ஊடாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஆதரவை இந்த வழக்கிற்கு வழங்குவதாகவும் அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தால் சுற்றுச்சூழல் பாதிப்புக்கு இழப்பீடு வழங்கக் கோரி சிங்கப்பூர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## செய்யவேண்டியது என்ன?

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தின் முன் விவாதத்துக்குக் கொண்டு வருவதை ஆட்சியாளர்கள் ஒத்தி வைத்ததை அடுத்து அதன் மீதான கவனக் குவிப்புக் குறைந்துள்ளது. அதே நேரம், நீக்கப்படவேண்டும் என்று இந்த ஆட்சியாளர்களும் ஏற்றுக்கொண்ட பயங்கரவாதத் தடைச் சட்டமும் தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் தற்போது தனது கருத்துக்கள் அடங்கிய கடிதம் ஒன்றை சர்வதேச மன்னிப்புச் சபை (அம்னஸ்டி இன்ரர்நேனல்) நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ளது. மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிராந்தியப் பிரதிப்பணிப்பாளர் ஸ்மிரிதி சிங்கினால் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் உத்தேச சட்டத்தில் உள்ள பல குறைபாடுகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அந்தச் சட்டம் நிறைவேற்றப்படக்கூடாது என்பதற்கான வலுவான சான்று அது.

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு மனித உரிமைகளின் மீதும் அந்தச் சட்டம் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது அரசமைப்பின் ஊடாக மக்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணானதாகவும் காணப்படுகின்றது.

இச்சட்டத்தின் கீழ் பயங்கரவாதக் குற்றமாகக் கருதப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் உரியவாறானதும் தெளிவானதுமான வரைவிலக்கணம் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் அரச பாதுகாப்பு அதிகாரிகள் வசம் மட்டுமீறிய அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இச்சட்டவரைபைத் தயாரித்தவர்கள் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நிபுணர்களால் முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கும் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு அமைவாகவும் இதனைத் தயாரிக்கவில்லை. எனவே சர்வதேச சட்டத்தின் கீழ் இலங்கை கொண்டிருக்கும் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்யவேண்டுமெனில் இச்சட்டமூலத்தில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறு மன்னிப்புச் சபை தெளிவாக விவரங்களை அடுக்கியுள்ளது. இப்புதிய சட்டமூலத்தின் ஊடாக இராணுவத்தினருக்கு மட்டுமீறிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் குறிப்பாக அது சுட்டிக்காட்டியுள்ளது.

இதுவரையில் பயங்கரவாதச் சட்டம் காவல்துறையினருக்குத்தான் அதிகளவு அதிகாரங்களை வழங்கியிருந்தது. இப்போது தரைப் படையினருக்கும் அளவுக்கு மீறிய அதிகாரங்கள் வழங்கப்படும்போது மனித உரிமை மீறல்களும் சட்டத்துக்குப் புறம்பான காரியங்களும் அதிகளவில் நடப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. அதிகாரம் கிடைத்தால் தரைப்படை எப்படி நடந்துகொள்ளும் என்பதற்கான மோசமான வரலாற்றுச் சான்றுகள் கடந்த 30 வருடங்களில் நிறையவே உண்டு.

எனவே மன்னிப்புச்சபை வலியுறுத்துவதைப் போன்றே பயங்கரவாதத்தை முறியடிக்கும் நோக்கில் புதிதாகக் கொண்டுவரப்படக்கூடிய எந்தவொரு சட்டமும் சர்வதேச சட்ட நியமங்களுக்கு அமைவாகக் காணப்படுவதை உறுதிப்படுத்த ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் அந்த இடைப்பட்ட காலப் பகுதியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதையும் பகிரங்க அறிவிப்போடு இடைநிறுத்தி வைக்க வேண்டும்.

# யாழ். - காரைநகர் பிரதான வீதி பாவனைக்கு உதவாத அவலம்

## பல ஆண்டுகளாக தொடர்கிறது என்று மக்கள் விசனம்

யாழ்ப்பாணம் - காரைநகர் பிரதான வீதிப் புனரமைப்பு வேலைகள் முடிக்கப்படாததால் மக்கள் தொடர்ந்தும் சிரமப்பட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகளில் ஒன்றான இதனூடாக வாகனப் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வாகனங்கள் விரைவில் பழுதடைவதாகவும் சாரதிகள் விசனம் வெளியிடுகினர்.

பெரும் சேதமடைந்து காணப்படும் இந்த வீதியால், அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளர்களைச் சரியான நேரத்தில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு முடியாதுள்ளதாக மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

அதுமட்டுமின்றி, பாடசாலை மாணவர்கள் மற்றும் தொழிலுக்குச் செல்பவர்களுக்கும் சரியான நேரத்தில் சமூகமளிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மக்களின் துன்ப துயரங்களைக் கருத்திக்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வீதியை உடனடியாக புனரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் வடக்கு அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கீடு செய்து அதன் ஒரு பகுதியாக இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டன. முதற்கட்டமாக வீதி கிளறப்பட்டது. சில இடங்களில் சரளைக் கற்கள் போடப்பட்டன.

பொருளாதார நெருக்கடி காரணமாக அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி இல்லை என்று ஆட்சியாளர்கள் அறிவித்ததும், திட்ட ஒப்பந்தக்காரர்கள் போட்டது போட்டபடி கிளறப்பட்ட வீதியை அப்படியே விட்டுவிட்டு தமது இயந்திர சாதனங்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்டுச் சென்றுவிட்டனர்.

ஏற்கனவே மிக மோசமாகச் சேதமடைந்திருந்த வீதி கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாத காலப் பகுதியில் பெய்த மழை காரணமாக இன்னும் மோசமாகச் சேதமாகி, மிக மோசமான நிலையை அடைந்தது. குண்டும் குழியுமாகியது. இப்போது கிட்டத்தட்ட அந்த வீதியால் போக்குவரத்துச் செய்யவே முடியாது என்கிற நிலை ஏற்பட்டுள்ளது.

மக்கள் தமது அவசர தேவைக்காகக்கூட இந்த வீதியூடாகப் பயணம் செய்ய முடியவில்லை.

யாழ்.மாவட்டத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரிய அதிகாரிகள் ஊடாக பேசி வீதிப் புனரமைப்புப் பணிகளை உடன் தொடங்க ஆவன செய்யவேண்டும் என்று மக்கள் வலியுறுத்துகின்றனர்.

# நயினை நாகபூசனி திருவிழா ஏற்பாடுகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம் - நயினாதீவு ஸ்ரீ நாக பூசணி அம்மன் ஆலயத் திருவிழா தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு மாவட்டச்செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கடற்போக்குவரத்தில் ஈடுபடும் படகுகளுக்குத் தகுதிச் சான்றிதழ் கட்டாயம் என்று வலியுறுத்தப்பட்டது. படகில் ஏற்றிச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையையும் உறுதிப்படுத்துவதுடன் தாழ்வுப் படகுகளில் ஏணிப்படி வசதி அமைத்தலை உறு திப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை, பொலிஸ் பாதுகாப்பு மற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட வசதிகள் , போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவோரை கைது செய்தல், கடற்போக்குவரத்தில் பாதுகாப்பு அங்கிகளை அணிவதை உறுதிப்படுத்தல், பாடசாலை மாணவர்களின் சாரணர் தொண்டர் சேவை, கடற்போக்குவரத்து நேரத்திற்கமைய தரைப்போக்குவரத்தை ஏற்படுத்தல், வாகனத் தரிப்பிடம், படகுகளில் பயணிகளுக்குரிய வசதிகள் இல்லாத படகுகளை சேவையில் ஈடுபடுவதை தவிர்த்தல், தரை மற்றும் கடற்போக்குவரத்து நேர அட்டவணையைக் காட்சிப்படுத்தல், மின் இணைப்பு , படகுகளில் மோட்டார் வாகனங்களை ஏற்றும்போது பிரதேச செயலரிடம் அனுமதி பெறல், யாசகம் பெறுவோர் உள்வருவதை தடுத்தல் என்பன தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

மேலும் கடைகளுக்கு பிரதேச சபையின் அனுமதி, நடமாடும் வைத்திய சேவை ,சுகாதாரம், மற்றும் குடிநீர் தேவை, மின்சாரத்தேவை, அமுதசுரபி அன்னதான ஒழுங்குகள், அம்புலன்ஸ் சேவை மற்றும் புனரமைக்கவேண்டிய வீதிகள் உள்ளிட்ட விடயங்களும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மாவட்ட செயலக பிரதம கணக்காளர், உதவி மாவட்டச் செயலாளர், நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர், வேலணை பிரதேச செயலாளர், வேலணை வலயக் கல்விப்பணிப்பாளர், மின்சாரசபை மின் அத்தியட்சகர், சுகாதாரத் துறைசார் பங்குதாரர்கள், இலங்கை போக்குவரத்து சபை உத்தியோகத்தர்கள், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் தரப்பினர், பிரதேசசபை, துறை சார் திணைக்கள தலைவர்களும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தார்கள்.

# பொசன் பௌர்ணமி தினத்தில் விசேட போக்குவரத்து ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 03

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவின் மேற்பார்வையில் பொசன் பண்டிகையை முன்னிட்டு விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

பொசன் பௌர்ணமி தினத்தன்று மிஹிந்தல, அனுராதபுரம் மற்றும் தந்திரிமலைக்கு வருகை தரும் யாத்திரீகர்களுக்காக விசேட போக்குவரத்துத் திட்டத்தைத் தயாரிக்குமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபை அதிகாரிகளுக்கு அமைச்சர் குணவர்த்தன ஆலோசனை வழங்கியுள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தலைமையில் புதன்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, அனுராதபுரம் டிப்போவில் இருந்து 85 பேருந்துகளும், பொலன்னறுவை டிப்போவில் இருந்து 125 பேருந்துகளும், ஹொரவப்பத்தானை டிப்போவில் இருந்து 45 பேருந்துகளும், கெக்கிராவ டிப்போவில் இருந்து 35 பேருந்துகளும், கெபித்திகொல்லாவ டிப்போவில் இருந்து 32 பேருந்துகளும், தம்புள்ள டிப்போவில் இருந்து 50 பேருந்துகளும் ரஜத பிரதேசத்தில் பக்தர்களின் வசதிக்காக சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், அனுராதபுரத்திலிருந்து மிஹிந்தலைக்கு 60 பேருந்துகளும், கண்டியில் இருந்து அனுராதபுரத்திற்கு 20 சிறப்புப் பேருந்துகளும், குருநாகலிலிருந்து அனுராதபுரத்திற்கு 50 பேருந்துகளும் இந்த ஆண்டு அனுராதபுரம் பொசன் புனித யாத்திரைக்காகச் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் கடற்படைக் கப்பல் கொழும்பு துறைமுகம் வருகை!

பிஎன்எஸ் ஷாஜஹான் எனும் பாகிஸ்தான் கடற்படைக் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த கடற்படைக் கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிஎன்எஸ் ஷாஜஹான் என்பது 134.1 மீற்றர் நீளமுள்ள போர்க்கப்பல் ஆகும், இது 169 பேர் கொண்ட குழுவினரால் நிர்வகிக்கப்படுவதோடு இதற்கு கேப்டன் அட்னான் லகாரி தலைமை தாங்குகின்றார்.

இரு கடற்படைகளுக்கு இடையே ஒத்துழைப்பையும் நல்லுறவையும் மேம்படுத்தும் வகையில் குறித்த கப்பல் நாட்டுக்கு வருகை தந்துள்ளது.

அத்துடன் தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு, குறித்த கப்பல் எதிர்வரும் 04 ஆம் திகதி பாகிஸ்தானுக்கு பயணிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் நாடாளுமன்றத்துக்கு திடீர் விஜயம்!



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோருக்கிடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பு நேற்று (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்றத்தில் இடம்பெற்றிருந்ததாக இலங்கைக்கான அமெரிக்கா தூதுவர் தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்க பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது இரு நாடுகளுக்கு இடையிலான முக்கிய அரசியல் விடயங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# 5 மாவட்டங்களுக்கு மண் சரிவு அபாயம்

இலங்கையில் ஐந்து மாவட்டங்களுக்கு மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய காலி, களுத்துறை, கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மண் சரிவு அபா யம் காணப்படும் பட்சத்தில் அப்பகுதியிலிருந்து மக்களைப் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகருமாறும் அந்த நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது. (02)

# மதங்களை அவமதிக்கும் வகையில் செயற்படுபவர்களுக்கு நடவடிக்கை

சிலர் மதங்களை அவமரியாதை செய்யும் வகையில் கருத்து வெளியிடுவதால் மதங்களுக்கு இடையில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்பு காணப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பல்வேறு முரண்பாடுகளுக்கு அடிப்படையான அறிக்கைகள் தொடர்பில் பொலிஸார் விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய சந்தேகநபர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாட்டில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் மதங்களை அவமதிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பது ஒவ்வொருவரின் பொறுப்பு எனவும் குறிப்பிட்டுள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir






சிறுவர் துஸ்பிரயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனியும் பொதுக்கூட்டமும் சங்கானையில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

சங்கானை பிரதேச கலாசார மண்டபத்தில் தொடங்கிய நடைபவனி வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் நிறைவுற்று பிரதேச செயலகம் முன்பாகப் பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாண மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத், வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரேமினி, வோர்ள்ட் விசன் தொண்டு நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# 19 கோடியே 50 லட்சம் ரூபா பண மோசடிகள் சி.ஐ.டி. விசாரணை தொடர்ந்து முன்னெடுப்பு

## அனுமதியை வழங்கினார் நீதிவான்

கொள்ளுப்பிட்டியில் காணி ஒன்றை விற்பனை செய்து பங்குதாரர்கள் குழுவொன்றிடம் இருந்து சுமார் 19 கோடியே 50 லட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டமை தொடர்பிலான சி.ஐ.டி. விசாரணையை இடைநிறுத்துமாறு பெரும்பான்மை பங்குதாரரான ஜனாதிபதி சட்டத்தரணி அஜித் பத்திரன விடுத்த கோரிக்கையை கோட்டை நீதிவான் திலின கமகே நிராகரித்துள்ளார்.

பிரதான சந்தேகநபரான பிரித்தானிய பிரஜை கதிரவேல் சற்குணம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி அஜித்பத்திரண ஆஜராகியிருந்தார்.

2004 ஆம் ஆண்டு கொள்ளுப்பிட்டி காலி வீதியில் 219.5 பேர்ச்சஸ் காணியை கொள்வனவு செய்தமை தொடர்பிலான முறைப்பாடு தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் வர்த்தக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட நிறுவனத்தின் பத்து பங்குதாரர்கள் 13 லட்சம் ஸ்ரேலிங் பவுண்களை முதலீடு செய்துள்ளனர். குறித்த காணி பின்னர் ஜூலை 2010 இல் விற்கப்பட்டது.

790 மில்லியனுக்கு காணி விற்கப்பட்டதாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

காணி விற்பனை மூலம் பெறப்பட்ட பணத்தில் ரூ.595507721 மட்டுமே பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மீதமுள்ள ரூ.194800279 மோசடியாகப் பெறப்பட்டதாகவும் அந்தத் தொகை வேறு தேவைக்கு தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

நவம்பர் 2022 இல் முதன்மை சந்தேக நபர் மீது பயணத் தடை விதிக்கப்பட்டது. இந்த வருடம் பெப்ரவரி 27 ஆம் திகதி அவர் மீண்டும் இலங்கைக்குள் பிரவேசிக்க முயற்சித்த போது குற்றப் புலனாய்வுப் பிரிவின் கட்டுநாயக்க பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு வாக்குமூலத்தைப் பதிவு செய்த பின்னர் பெப்ரவரி 28 ஆம் திகதி கோட்டை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

சந்தேக நபரை மார்ச் மாதம் 14 ஆம் திகதி வரை மேலதிக விசாரணைகளுக்காக விளக்கமறியலில் வைக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிவானிடம் கோரிக்கை விடுத்தனர். எனினும் தலா 50 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளின் அடிப்படையில் அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

மார்ச் 08 ஆம் திகதி பயணத் தடை தற்காலிகமாக நீக்கப்பட்டது மே 17 2023 அன்று மீண்டும் அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது செப்ரெம்பர் மாதம் 13 2023 வரை சந்தேக நபருக்கு விதிக்கப்பட்ட பயணத் தடையை நீதிமன்றம் மீண்டும் தற்காலிகமாக நீக்கியது. (05)

# யாழ். போதனா மருத்துவ கழிவுகளை எரிக்க கோம்பையன்மனல் மயானத்தில் எரியூட்டி



யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கான எரியூட்டியை கோம்பையன்மணல் மயானத்தில் நிறுவுவதற்கு ஒருங்கிணைப்புகுழுவில் வியாழக்கிழமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கான எரியூட்டி நிறுவுவதற்கு யு.என்.டி.பி. நிறுவனம் நிதி உதவி வழங்கியிருந்தது. எரியூட்டி அமைப்பதற்கான இடத்தை தெரிவு செய்வதில் நீண்ட இழுபறி நிலவியது. ஒவ்வொரு இடத்திலும் பொதுமக்கள் எதிர்ப்புக்கள் தெரிவித்தமையால் இடத்தெரிவில் காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டது. இதன்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி பங்கேற்று சில விளக்கங்களை வழங்கினார்.

மருத்துவக்கழிவுகள் (கிளினிக்கல்வேஸ்ட்) என்பதில் உடலின் சில பாகங்கள், குருதி, சிறுநீர் போன்றவைதான் இருக்கும். முழுமையான உடலை தகனம் செய்கின்றார்கள். அதில் சில கழிவுகள் எஞ்சும். ஆனால் மருத்துவக் கழிவுகளை எரியூட்டிகள் ஊடாக தகனம் செய்யும்போது எவையும் மிஞ்சாது. சூழலுக்கு எரியூட்டி ஊடாக புகை செல்வதே தெரியாது. எரியூட்டியில் முதலில் 650 டிகிரியில் மருத்துவக் கழிவுகள் தகனம் செய்யப்படும். பின்னர் 800 தொடக்கம் ஆயிரம் செல்சியஸ் வெப்பத்தில் அவை இரண்டாவதாக தகனம் செய்யப்படும். இதனால் சூழல் பாதிப்பு ஏற்படாது. இதை மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்குத் தெளிவூட்டவேண்டும். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் சிறிய எரியூட்டி உள்ளது. எதிர்காலத்தில் அதுவும் இயக்கப்படும் என்று மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, கோம்பையன் மணல் மயானத்தில் ஏற்கனவே உடல்கள் எரியூட்டப்படுகின்றன. அங்கே மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கு எதிர்ப்பு இருக்காது என்ற கருத்தை முன்வைத்தார். மக்களின் கருத்துக்களை கேட்டு முடிவு செய்யலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் சுட்டிக்காட்டினார். அதேபோன்று யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், மாநகரசபையில் மக்கள் பிரதிநிதிகள் இருந்த போது இது தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது. மக்களின் கருத்துக்களைக்கேட்டு அதற்கு அமைவாகச் செயற்படலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

இதன்போது கோம்பையன்மணல் மயானச் சபை சார்பில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதி, எரியூட்டி அமைப்பதற்கு நாம் இணக்கம் தெரிவித்துள்ளோம். எரியூட்டியின் புகைபோக்கியின் உயரம் 22 மீற்றராகும் என்று எமக்குத் தெரிவிக்கப்பட்டது. எனவே சூழல் பாதிப்பு ஏற்படாது என்ற வகையில் நாமும் இணங்குகின்றோம் என்று குறிப்பிட்டார்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், இ.அங்கஜன் மற்றும் வடக்கு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் இணக்கம் தெரிவித்தனர்.

இதேவேளை, மயானம் யாழ். மாநகர சபைக்குச் சொந்தமானது என்ற அடிப்படையில் எரியூட்டி அமைப்பது தொடர்பில் போதனா வைத்தியசாலை மாநகர சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளவேண்டும் என்று மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் கேட்டுக்கொண்டதையும் ஒருங்கிணைப்புக் குழு ஏற்றுக்கொண்டது. (05)

# சகல எதிர்க்கட்சிகளும் ஒத்துழைத்தால் தேசிய அரசாங்கம் அமைக்க முடியுமாம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்

தேசிய அரசாங்கத்தை அமைக்க சகல எதிர்க்கட்சிகளும் இணக்கம் தெரிவித்தால் அது தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்துவார். அமைச்சு பதவிகளை இலக்காகக் கொண்டு அரசாங்கத்தில் இணையும் தரப்பினருக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்பட மாட்டா என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது என வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு அரசாங்கத்துடன் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சகல அரசியல் கட்சிகளுக்கும் பலமுறை அழைப்புவிடுத்தார். ஆசை, ஆனால் பயம் என்ற காரணத்தால் அரசாங்கத்துடன் இணையவில்லை. பாரிய போராட்டத்தில் இருந்து நாடு தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது.

தேசிய அரசாங்கத்தை அமைக்க பலமுறை அழைப்பு விடுத்தும் எதிர்க்கட்சிகள் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. தற்போதைய நிலையில் தேசிய அரசாங்கத்தை அமைக்க சகல எதிர்க்கட்சிகளும் இணக்கம் தெரிவித்தால் அது தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்துவார்.

அமைச்சு பதவிகளை இலக்காகக் கொண்டு அரசாங்கத்தில் இணையும் தரப்பினருக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்படமாட்டா என்பதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது. அமைச்சரவையை விரிவுபடுத்தும் நோக்கம் தற்போது கிடையாது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள். அமைச்சு பதவிகள் இல்லாத காரணத்தால்; ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் எவரும் எதிர்க்கட்சி பக்கம் செல்லமாட்டார்கள் என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும். - என்றார். (05)

# தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு சேகரித்த நிதி சிலாபம் மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றம்

## நோயாளர் நலன்புரிச் சங்கம் குற்றச்சாட்டு



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கென லயன்ஸ் கழகத்தின் முன்னாள் ஆளுநர் லயன் ஆர்.எல்.ராஜ்குமாரால் மிகப்பிரமாண்டமான அளவில் சேகரிக்கப்பட்ட நிதி, சிலாபம் மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு மாற்றுவது என கடந்த லயன்ஸ் கழக ஆளுநர் சபைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லயன்ஸ் கழக ஆளுநரின் இந்தத் தான்தோன்றித்தனமான செயற்பாட்டுக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்க செயலர் லயன் சி.ஹரிகரன் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

லயன்ஸ் கழகத்தில் 2021 - 2022 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆளுநராகச் செயற்பட்ட லயன் ஆர்.எல்.ராஜ்குமார், யாழ்.மாவட்டத்தின் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் தான், தற்போது தென்னிலங்கையில் வசித்தாலும் தான் பிறந்து வளர்ந்த மண்ணுக்கு - அந்தப் பிரதேச சுகாதாரத்துறைக்கு - என ஏதாவது மிகப்பாரிய சேவைத்திட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்ற நன்நோக்கில் அதற்கு நிதி சேகரிப்பிலும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு ஊடாகவும் ஒருகோடியே 91 லட்சம் ரூபா (சர்வதேசத்தால் வழங்கப்பட்ட நிதி உள்ளடங்கலாக) திரட்டப்பட்டது. இந்த நிதியின் ஊடாக புற்றுநோயாளர்களின் சகல விடுதிக் கட்டில்களுக்கும் ஒட்சிசன் வசதிகளை வழங்குவதற்கான தொகுதியும் அமைக்கப்பட்டு வைத்தியசாலையிடம் கையளிக்கப்பட்டது. மீதமுள்ள 40 லட்சத்துக்கும் வைத்தியசாலையின் அவசர தேவை தொடர்பில் வைத்திய அத்தியட்சகரிடம் வினவியபோது, சத்திர சிகிச்சைக் கூடத்துக்குரிய மருத்துவ உபகரணங்களுக்கான விண்ணப்பமும் கடிதம் மூலம் வழங்கப்பட்டது.

இதற்கான அனுமதியை முன்னாள் ஆளுநர் ஆர்.எல்.ராஜ்குமார், ஆளுநர் சபையில் வேண்டுகையை சமர்ப்பித்த போது ஆளுநர் வைத்தியர் அநோமாவின் முறைகேடான செயற்பாட்டால் அந்த நிதி சிலாபம் மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு மாற்றுவது என அவரால் நியமிக்கப்பட்ட ஆளுநர் அவையால் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இதில் வெட்கக்கேடான விடயம் என்னவென்றால், எமது வடபகுதியைச் சேர்ந்த சில லயன்ஸ்களும் அதற்கு ஆதரவு வழங்கியுள்ளார்கள். வடக்கு மட்டுமல்ல கிழக்கு, அநுராதபுரம், புத்தளம் ஏன் சிலாபத்தில் இருந்துகூட புற்றுநோயாளர்கள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். இதனை வடபகுதியைச் சேர்ந்த சிலர் உணராமல் இதற்கு எதிராகச் செயற்பட்டமை வேதனையைத் தருகின்றது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் பெயரைப் பயன்படுத்தி - அங்குள்ள மிகக் கொடூர நோயாகிய புற்றுநோயாளர்களுக்கு உதவுவதற்கென - சேகரிக்கப்பட்ட நிதி ஒரு ரூபாகூட வெளியில் செல்வதற்கு நாம் என்றைக்கும் அனுமதிக்கமாட்டோம். அந்த நிதி முழுமையுமாக யுத்தத்தால் பின்தங்கிய மாவட்டமாகிய யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேற்றப் பிரதேசமாகிய வலி.வடக்கில் அமைந்துள்ள தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கே வழங்கப்படவேண்டும். இது தொடர்பாக நான் முன்னாள் ஆளுநர் சபையிலுள்ள ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமாகக் கடிதம்மூலம் தெரியப்படுத்தி இருக்கின்றேன். அதன் தலைவராக இருப்பவர் எமது வடபகுதியைச் சேர்ந்தவர். சுகாதாரத் துறையின் முக்கியத்துவத்தையும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் தேவைகளையும் நன்கு உணர்ந்த நூற்றாண்டு ஆளுநர் லயன் வைத்தியர் லயன் வி.தியாகராஜா. இந்தத் திட்டம் தெல்லிப்பழையில் ஆரம்பிப்பதற்கு முக்கிய இணைப்பாளராகச் செயற்பட்டவர் வைத்தியர் லயன் வி.தியாகராஜா. நாளை (சனிக்கிழமை) இவரது தலைமையில் முன்னாள் ஆளுநர்களின் உயரிய அவை கூடுகின்றது. அவர்கள் முடிவெடுப்பவர்கள் அல்லாது விடினும் இந்த விடயம் தொடர்பில் விவாதித்து ஆளுநருக்கு சிறந்த ஆலோசனையை வழங்குவார்கள் என்று எண்ணுகின்றேன். இது தொடர்பில் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆளுநர் சபைக் கூட்டத்தில் பங்குபற்றும் அனைவருக்கும் பிரத்தியேகமாக கடிதம் மூலம் அறிவித்துள்ளேன். எவ்வாறாயினும் தீர்க்கமான ஒரு முடிவை எடுப்பார்கள் என்று எண்ணுகின்றேன். இதில் ஆரோக்கியமான பதில் கிடைக்கப்பெறாவிட்டால். சர்வதேச லயன்ஸ் கழகம் ஊடாக நடவடிக்கை எடுக்க முனைவேன். அதுவும் தவறின் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பெயரில் நிதி சேகரித்து வேறு வைத்தியசாலைக்கு வழங்கினால் நிதி அன்பளிப்புகளை வழங்கிய தனிநபர்களைத் திரட்டி சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கவேண்டியும் ஏற்படலாம். - என்றுள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# வைத்திய நியமனத்தில் புறக்கணிப்பு யூனானி வைத்தியர்கள் போராட்டம்!





(பாறுக் ஷிஹான்)

வைத்திய நியமனத்தில் யூனானி வைத்தியர்களாகிய தாங்கள் புறக்கணிப்பட்டுள்ளதாகத் தெரிவித்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டம் யூனானி வைத்தியர்கள் இன்று ஒன்று கூடி மஹரகம நாவின்ன பகுதியில் அமைந்துள்ள ஆயுர்வேத திணைக்களத்தின் முன்பாக முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தின் போது பாதிக் கப்பட்டவர்கள் ஆயுர்வேத வைத்தியர்களைநியமனம்செய்யும்போதுஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி வைத்தியர்களை உள்ளடக்கி நியமனம் வழங்கப்படுவது வழக்கமானதொன்றாக இருந்து வந்தது எனவும் ஆனால் தற்போது இந்த நடைமுறை மீறப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டினர். மேலும் 100 இற்கும் மேற்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு மட்டும் நியமனம் தற்போது வழங்குவது யூனானி வைத்தியர்களாகிய எமக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் ஆயுர்வேத வைத்தியர்கள் நியமனங்களின் போது, ஒரே முறையில் 7 ஆயுர்வேத வைத்தியர்களும் இரு யூனானி வைத்தியர்களும் ஒரு சித்த வைத்தியரும் உள்வாங்கப்பட்டு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டு வந்தன.

ஆனால், தற்போது வழங்கப்பட இருக்கின்ற ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நியமனங்களில் யூனானி வைத்தியர்கள் உள்ளீர்க்கப்படாமை சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதுடன் இது யூனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி என தாட் கருதுவதாகவும் தெரிவித்தனர்.

மேற்படி ஆயுர்வேத வைத்தியர்களின் நியமனத்தில் யூனானி வைத்தியர்களாகிய தாங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் உரிய தரப்பினர் கவனம் செலுத்துமாறும் பாதிக்கப்பட்டுள்ள யூனானி வைத்தியர்கள் கோரிக்கைகளை முன் வைத்து பல்வேறு சுலோகங்களை ஏந்தியிருந்தனர்.

இது தவிர, மேற்படி நியமனத்தில் யூனானி வைத்தியர்களையும் இணைத்துக்கொள்வதற்கு தேவையான பணிப் புரையை உரிய அதிகாரிகளுக்கு வழங்க வேண்டுமெனவும் யூனானி வைத் தியர்களாகிய எமக்கு தற்போது இழைக்கப் பட்டிருக்கின்ற அநீதி தொடர்பில் உரிய தரப்பினர் தீர்வொன்றைப் பெற்றுத்தர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். (05)

## சுகாதாரமற்று விசுவமடு சந்தை அதிகாரிகள் அசமந்தப் போக்கு

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட விசுவமடு சந்தையில் பல வருட காலமாக சந்தையில் உள்ள மீன் சந்தையில் பயன்படுத்தப்படும் கழிவு நீர் மக்கள் பயன்படுத்தப்படும் ஆற்றிலே கலக்கக் கூடிய வகையில் திறந்து விடப்பட்டுள்ளது. முறையாக கழிவுநீரை அகற்றப்படவில்லை, இதன் காரணத்தால் சந்தை வளாகம் முழுவதும் துர்நாற்றம் வீசுவதுடன் மக்கள் பயன்பாட்டில் உள்ள கால்வாயிலே கழிவுநீரை செல்லக் கூடிய வகையில் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது.

இது தொடர்பாக சுகாதார பரிசோதர்களைக் தொடர்பு கொண்ட பொழுது புது குடியிருப்பு பிரதேச சபையினருக்கு இது தொடர்பாக பல முறை தெரியப்படுத்தி இருந்த போதிலும் அசமந்தப் போக்குடன் புதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் இதே போன்று தனியார் ஒருவர் உரிய முறையில் கழிவு நீரை அகற்றுவதற்கு கால்வாய் அமைக்கப்படாமல் உணவகம் அமைக்கப்பட்டால் உடனடியாக கடை உரிமையாளரை நீதிமன்றம் முற்படுத்தநடவடிக்கை எடுக்கப்படும். சுகாதார பரிசோதர்கள் இதற்கு மட்டும் ஏன் அஞ்சுகிறார்கள்? அப்படியாயின் மக்களுக்கு ஒரு சட்டம் நிறுவனங்களுக்கு ஒரு சட்டமா? என மக்கள் கேள்வி எழுப்பி உள்ளனர். எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கூறியுள்ளனர். (05 - 113)

## முழு ஆசியாவின் காவலனே ரணில்

### வஜிர பெருமிதம்

ஆசியாவை பிளவுபடுத்த இடமளிக்க மாட்டோம் என உலகத்தின் முன் துணிச்சலாக அறிவித்த ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் ஜனாதிபதியாகச் செயற்படுவது முழு ஆசியாவுக்கும் விசேட பாதுகாப்பு.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஜப்பானில் நடைபெற்ற உச்சி மாநாட்டின்போது இது தொடர்பான நிலைப்பாட்டை ஜனாதிபதி அறிவித்தார் எனவும், ஜனாதிபதியிடம் தெளிவான வெளிவிவகாரக் கொள்கை உள்ளது என்பதற்கு இது சான்று எனவும் வஜிர குறிப்பிட்டார்.

மேலும், இலங்கை மீதான ஜப்பானின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதோடு, ஜப்பான் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து இலங்கை தொடர்பில் ஜப்பானில் நிலவும் அவநம்பிக்கை மற்றும் சந்தேகங்களை நீக்குவதற்கும் தெளிவற்ற சூழ்நிலைகளைக் களைவதற்கும் ஜனாதிபதியின் விஜயம் உதவியது எனவும் அவர் சுட்டிக் காட்டினார். (02)

## மாவட்டங்களில் முதலிடம் பிடித்த எம்.பிக்களுக்கு அமைச்சுப் பதவி

### மொட்டுவின் தலைவர் மஹிந்த யோசனை

கொழும்பு, ஜூன் 03

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு மாவட்டங்களில் முதலிடம் பிடித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சரவை அமைச்சுப் பதவி வழங்கினால் அது நல்ல விடயம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊடக நிறுவனங்களுக்குக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வர முடியாத வகையில் செயற்படுவதற்கு ஊடக நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மஹிந்த குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர்கள் தொடர்ந்தும் கட்சியுடனேயே இருக்கின்றனர் என்றும், எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரம் வலுவடையும் என்றும் மஹிந்த நம்பிக்கை வெளியிட்டார். (02)

## வைகாசி திருக்குளிர்த்சி சடங்கு கிழக்கில் களைகட்டுகின்றது!





(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் கண்ணகித்தாயின் வைகாசி திருக்குளிர்த்தி சடங்கு பயபக்தியுடன் களைகட்டி வருகிறது.

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயவருடாந்த வைகாசித் திங்கள் திருக்குளிர்த்சி சடங்கு கடந்த மூன்று வருடகாலத்தைவிட ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் நடந்தேறி வருகிறது.

நேற்று (வெள்ளிக்கிழமை) ஆதலால் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்திற்கு வந்து சடங்கில் கலந்து கொண்டனர்.

பறை மேளம் குழல் ஒலிக்க, கப்புகன்மார் முன்னிலையில், உடுக்கை ஒலியுடன் அரோஹரா கோம் குரவை ஒலிக்கு மத்தியில் ஊர்சுற்றுக்காவியம்பாடல் இடம் பெறுகிறது.

பகலில் பச்சை கட்டல் நிகழ்வு நடந்தேறி வருகிறது.

எதிர்வரும் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை திருக்குளிர்த்தி பாடுதலுடன் சடங்கு நிறைவடையும்.

இந்நிகழ்வுகள் அனைத்தும் பண்டைய கலாசார பாரம்பரிய முறைப்படி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## பொருளாதார நெருக்கடியால் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களே அதிகளவு பாதிப்படைவு

### செஞ்சிலுவை குழு வருத்தம்

இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக குறைந்த வருமானம் பெறும் மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச செஞ்சிலுவை குழு தெரிவித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைகுழு இலங்கை செஞ்சிலுவை குழுவுடன் இணைந்து இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட 11 ஆயிரத்து 850 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அவசர நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது.

இந்த ஒத்துழைப்பு இலங்கையின் சுகாதார துறைக்கும் உதவியுள்ளது - அத்தியாவசிய மருந்துகளை வழங்கியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரநெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்டது குறைந்தவருமானம் பெறும் குடும்பங்களே என தெரிவித்துள்ள கொழும்பிற்கான ஐசிஆர்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் செவரைன் சப்பாஸ், எங்களின் மனிதாபிமான நடவடிக்கைகளின் ஒருபகுதியாக சவாலான தருணங்களின் அவசர தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஐ.சி.ஆர்.சி. எஸ்.எல்.ஆர்.சியுடன் இணைந்து செயற்பட்டது என குறிப்பிட்டுள்ளார். (05)

## ஆஸ்திரேலிய பௌத்தமதகுரு விமானப் பயணம் 12 மணிநேரம் தாமதமானதால் பெரும் சர்ச்சை

ஆஸ்திரேலியாவை சேர்ந்த மிகவும் மதிக்கப்படும் பௌத்த மதகுரு அஜான் பிராமின் விமானப்பயணம் கொழும்பு விமான நிலையத்தில் பல மணிநேரம் தாமதமாகியமை தொடர்பாகப் பெரும் சர்ச்சை மூண்டுள்ளது.

பிரதமர் தினேஸ்குணவர்த்தன கொழும்பு விமானநிலையத்தில் காணப்பட்டமை காரணமாகவே பௌத்தமதகுருவின் விமானப்பயணத்தை அதிகாரிகள் தாமதித்தனர் என முதலில் தகவல்கள் வெளியாகியிருந்த போதிலும் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வாவின் பிரசன்னம் காரணமாகவே அவரது பயணம் தாமதமானது என தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

பௌத்த மதகுரு சிங்கப்பூர் எயர்லைன்ஸ் விமானத்தின் மூலம் சிங்கப்பூருக்கும் பின்னர் பேர்த்திற்கும் செல்வதற்காக செவ்வாய்க்கிழமை கொழும்பு விமான நிலையத்துக்கு சென்றுள்ளார் - விமானத்தில் ஏறுவதற்காக முக்கிய பிரமுகர்களுக்கான பகுதியில் அவர் காத்திருந்துள்ளார்.

அமைச்சர் நிமால்சிறிபால டி சில்வாவும் முக்கிய பிரமுகர்களுக்கான பகுதியில் காணப்பட்டுள்ளார்.

இதன் பின்னர் ஆஸ்திரேலியாவை சேர்ந்த பௌத்தமதகுருவிற்கு உதவிக்கொண்டிருந்த விமானநிலைய அதிகாரி அமைச்சரை விமானத்திற்குள் ஏற்றுவதற்காக அவருடன் விமானத்திற்குள் சென்றுள்ளார்.

எனினும் அந்த அதிகாரி பௌத்தமதகுருவை விமானத்தில் ஏற்ற மறந்துள்ளார் - மேலும் அவர் தாமதமாக வந்ததால் பௌத்த மதகுரு குறிப்பிட்ட விமானத்தில் ஏற முடியாத நிலை காணப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பௌத்த மதகுரு அந்த விமானத்தை தவறவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது - அவரது பயணம் 12 மணித்தியலாங்கள் தாமதமாகியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.06.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 17 வெள்ளிக்கிழமை 02.06.2023 கதிர் 75

## பாண்டிச்சேரி – காங்கேசன்துறை சரக்குக் கப்பல் சேவைக்கு அனுமதி

இலங்கையைச் சேர்ந்த ஹேலீஸ் நிறுவனத்துக்கு தென்னிந்தியாவுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான சரக்குக் கப்பல் சேவையை நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எதிர் வரும் 10ஆம் திகதி முதல் அவர்கள் சேவையை நடத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. காரைக்கால் – கே.கே.எஸ். இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவை ஆரம்பிப்பதில் இழுபறி நீடித்து வருகின்றது.

இந்தியத் தரப்பிலிருந்தே அதற்கான அனுமதிகள் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை என்று அறியமுடிகின்றது. இதற்கிடையில் பாண்டிச்சேரியிலிருந்து காங்கேசன்துறைக்கான சரக்குக் கப்பல் சேவையை எதிர் வரும் 10ஆம் திகதி முதல் நடத்துவதற்கான அனுமதி ஹேலீஸ் நிறுவனத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. (02)

## வவுனியாவில் 2ஆவது நாளாக இன்றும் எரிபொருள் வரிசை





வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரண்டாவது நாளாக இன்றும் எரிபொருளைப் பெற்றுகொள்ள வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தன.

பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லை என்றற பதாகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்களிலேயே எரிபொருள் விநியோகிக்கப்படுவதால் அங்கெல்லாம் நீண்ட வரிசை ஏற்பட்டுள்ளது.

எரிபொருளுக்கான வரிசை யுகம் முடிவுக்கு வந்து விட்டதாக ஆட்சியாளர்கள் திரும்பத் திரும்பச் சொல்லி வந்தாலும் கடந்த சில தினங்களாக நாட்டின் பல பகுதிகளிலும் எரிபொருளைப் பெற மக்கள் வரிசையில் நிற்கவேண்டியவர்களாக இருந்தார்கள்.

எரிபொருள்களின் விலை புதன் கிழமை குறைக்கப்பட்டது. விலைக் குறைப்பை எதிர்பார்த்த நிரப்பு நிலைய உரிமையாளர்கள் முன்கூட்டிய பதிவை மேற்கொள்ளாமல் காத்திருந்தனர். விலைகுறைத்த பின்னர் அனைவரும் ஒரே தினத்தில் கொள்முதல் கட்டளைகளை வழங்கியதனால், நிரப்பு நிலையங்களுக்கு அவை வந்து சேரத் தாமதமாகின்றன.

இதேவேளை, குறைந்தபட்சம் 50 சதவீத கையிருப்பை பேணாத எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப் பத்திரத்தை இடைநிறுத்துமாறு பணிப்புரை விடுக்கவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர அறிவித்துள்ளார். (100)

# கஜேந்திரகுமார் எம்.பி. மீது மருதங்கேணியில் தாக்குதல்

## பிஸ்ரலை நீட்டி மிரட்டினர் எனவும் அரச புலனாய்வாளர்கள் மீது குற்றச்சாட்டு



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் இன்று பகல் மருதங்கேணியில் தாக்கப்பட்டார். அவரை அடித்தார் என்று கூறப்படும் அரச புலனாய்வாளர் தப்பிச் சென்று தலைமறைவாகினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.


இது தொடர்பான முரண்பாடுகளின்போது தன்னை பொலிஸ் புலனாய்வாளர் என்று அடையாளப்படுத்திக் கொண்ட நபர் ஒருவர் பிஸ்ரலைக் காட்டி மிரட்டினார் என்றும் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

சம்பவம் குறித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

மருதங்கேணியில் உள்ள விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர்களைச் சந்திப்பதற்காக அங்கு சென்றிருந்தார் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார். அங்குள்ளமைதானத்தில் இளைஞர்களுடன் அவர் கலந் துரையாடிக்

2☞

## கற்பிட்டியில் இந்தியர் உட்பட எண்மர் கைது



இலங்கைக்கு ஐஸ் போதைப்பொருளைக் கடத்திய குற்றச்சாட்டில் இந்தியர் ஒருவர் உள்ளிட்ட எண்மர் கற்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டியிலிருந்து அக்கறைப்பற்று பகுதிக்கு ஐஸ் போதைப் பொருளைக் கடத்திய ஒருவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்தே ஐஸ் போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையதாகத் தெரிவிக்கப்படும் இந்தியர்கள் உள்ளிட்ட எண்மர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து புடவைகளை இலங்கைக்கு கொண்டு வந்து விற்பனை செய்யும் இந்தியரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

## அரச நியமனத்தை வழங்கக் கோரி

# செயற்றிட்ட உதவியாளர்கள் வவுனியாவில் இன்று பேரணி





இடைநிறுத்தப்பட்ட தமது நியமனங்களை உடனடியாக மீள வழங்குமாறு கோரி வட மாகாண செயற்திட்ட உதவியாளர்கள் இன்று வவுனியாவில் ஆர்ப்பாட்ட பேரணி நடத்தினர்.

வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாகத் தொடங்கிய பேரணி மணிக்கூட்டுசந்தியை அடைந்து அங்கிருந்து வவுனியா, தொடருந்து நிலைய வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதியின் உப அலுவலகம் வரை சென்றது. அங்கு ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான மனுவைக் கையளித்தனர்.

தமது போராட்டம் குறித்து செயற்றிட்ட உதவியாளர்கள் தெரிவித்ததாவது:

2019இல் நல்லாட்சி எடுத்த அமைச்சரவை முடிவின்படி தேசியக்கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு அமைச்சகம் மூலம் செயற்திட்ட உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கோரி வர்த்தமானி வெளியிடப்பட்டது.

ஜூன் மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் முறையே இரண்டு நேர்காணல்கள் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றன. பின்னர் 2019 அன்று 6,547 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டது. நியமிக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் அனைத்து மாவட்டச்செயலகங்களுக்கும் அனுப்பப்பட்டது. இந்நிலையில் எமது கடமைகளைத் தொடர்புடைய அலுவலகங்களில் நாம் ஏற்றுக்கொண்டோம்.

இந்தச்சூழலில், ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதால், நியமனத்தை இடைநிறுத்திய சுற்றறிக்கை அனைத்து மாவட்டச்செயலகங்களுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரால் தொலைநகலில் அனுப்பப்பட்டது.

அதற்கமைய நாம் பணியிலிருந்து ஒதுங்கியிருந்தோம். தேர்தல் முடிவடையும் வரை காத்திருந்தோம். அதன் பின்னர் மீண்டும் பணிகளை பொறுப்பேற்க சென்றபோது எம்மை சேவையில் இணைக்க முடியாது என தெரிவித்தனர். எங்கள் நியமனங்கள் நிதி அமைச்சினால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவே எமக்குத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரால் மேற்கண்ட நியமனத்தை மீட்டெடுக்க தொடர்ந்து வலியுறுத்தப்பட்ட போதிலும், இதுவரை எந்த தகவலும் ஆட்சியாளர்களிடம் இருந்து கிடைக்கவில்லை.

நான்கு வருடங்களாக நாங்கள் வேலையில்லாமல் இருக்கிறோம். தற்போதைய ஜனாதிபதியே அப்போது பிரதமராக இருந்தார். தற்போது வேலையில்லாமையால் நாமும் எங்கள் குடும்ப உறுப்பினர்களும் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம். வாழ்வாதார இழப்பு காரணமாக கடுமையான துயரங்களுக்கு ஆளாகியுள்ளோம்.

இந்த ஆட்சியிலாவது எமக்கு நியமனம் வழங்குவீர்களா, இல்லையா என்பதையாவது உறுதியாக கூறும்படி கேட்டு நிற்கின்றோம். எமக்கு நீதி கிடைக்காது விடின் நீதிமன்றத்தை நாடவும் முடிவு செய்துள்ளோம் – என்றார்கள்.

குறித்த பேரணியில் நியமனம் இடைநிறுத்தப்பட்ட வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வடக்கு மாகாணத்தை சேர்ந்த செயற்திட்ட உதவியாளர்கள் கலந்துகொண்டனர். (100)

# கேரள கஞ்சாவுடன் சிக்கிய பொலிஸ்




கேரள கஞ்சாவுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர் என்று தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை – அனுராதபுரம் சந்தியில் இருந்து ஓட்டோவில் கேரள கஞ்சா பொதியை ஏற்றிக்கொண்டு செல்லும் போது 96 ஆம் கட்டை பகுதியில் உள்ள மதுபானசாலைக்கு அருகில் வைத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் முள்ளிப்பொத்தானை– 10 ஆம் கொலனியில் வசித்து வரும் நான்கு பிள்ளைகளின் தந்தையான திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் முத்தலிப் மாஜித் (வயது 54) எனத் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரிடம் ஒரு கிலோ பத்து கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது எனவும், சந்தேகநபர் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் தம்பலகாமம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ரணிலுக்கு எதிராக சர்வதேச சூழ்ச்சி

## அரசு விழிப்பாக இருக்க வேண்டும் என்று குமார வெல்கம எச்சரிக்கை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக சர்வதேச சூழ்ச்சி நடக்கின்றது. அது தொடர்பில் அரசு விழிப்பாகவே இருக்க வேண்டும்.

–இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே இந்த நாட்டை நிர்வகிக்க முடியும். எனவே, அவருக்கு ஆதரவு வழங்க வேண்டியது கட்டாயம். அதைவிட மாற்று வழி இல்லை.

அரசதலைவரும், அரசும் விழிப்பாகவே இருக்க வேண்டும். ஜனாதிபதிக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் விதத்தில் சர்வதேச சூழ்ச்சி நடக்கின்றது. இந்த சூழ்ச்சி ரணிலிடம் எடுபடாது என்ற நம்பிக்கை உள்ளது. – என்றார். (02)

# மாகாண வளத்தை முறையாகப் பயன்படுத்தி பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பலாம்

## கிழக்கு ஆளுநர் மட்டு. செய்தியாளர்களிடம் தெரிவிப்பு





கிழக்கு மாகாணத்தில் காணப்படும் வளங்களை முறையான விதத்தில் பயன்படுத்துவதன் மூலம் நாட்டின் நலிவுற்ற பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பி, நிலையான அபிவிருத்தியை நோக்கி முன்கொண்டு செல்ல முடியுமென கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செய்தியாளர்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிநேகபூர்வ சந்திப்பின்போது ஆளுநர் இதனைத் தெரிவித்தார். கிழக்கு மாகாண ஆளுநராகக் கடமையேற்ற பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு முதற்தடவையாக வருகை தந்த ஆளுநர், அங்கு களப்பணியாற்றும் செய்தியாளர்களைச் சந்தித்து மாகாணத்தின் நிலையான அபிவிருத்திக்குத் தேவையான கருத்துக்களைப் பெற்றுக்கொண்டார். மக்களின் பிரச்சினைகளை இனங்காணவும் புதிய பொருளாதார ரீதியான கொள்கை மாற்றத்தை ஏற்படுத்தவும் அதற்கான விழிப்பூட்டல்களை மக்களுக்கு வழங்குதல் போன்ற பல்வேறு விடயங்களும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டன.

மாவட்டத்தில் செய்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் ஆளுநரினால் குறிப்பாகக் கவனஞ்செலுத்தப்பட்டது.

ஆளுநரின் நிலையான மக்கள் நல வேலைத்திட்டங்களை வரவேற்ற ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் தமது பங்களிப்புகளை வழங்கத் தயாராக இருக்கின்றனர் என்றும் குறிப்பிட்டனர். புதிய ஆளுநரை வரவேற்று, இன, மத வேறுபாடின்றி அவரது மக்கள் பணி தொடர வேண்டுமென வாழ்த்திப் பாராட்டிய மட்டக்களப்பு மாவட்ட தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் சார்பாக ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம்.பாரிஸ் பொன்னாடை போர்த்தப்பட்டதுடன் நினைவுச்சின்னமும் வழங்கப்பட்டது.

# மிக நீண்ட காலத்தின் பின்னர் கோணவத்தை பாலம் சீரமைப்பு






(கே எ ஹமீட் அட்டாளைச்சேனை)

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யாப்படாமல்இருந்த கோணவத்தை கொட்டுப் பாலம் -இரும்பு பாலமாக புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் கிராமிய பாலங்கள் திட்டத்தின் கீழ் குறித்த பாலம புனரமைப்புச்செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நெதர்லாந்து அரசின் உதவித்த திட்டத்தின் கீழ் குறித்த பாலம் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன், போர்சைட் பொறியியல் நிறுவனம் இந்தப் பாலத்தை அமைப்பதற்கான உள்நாட்டின் பிரதான ஒப்பந்த நிறுவனமாக செயற்படுகின்றது.

நிறுவனத்தின்பிராந்திய பொறியியலாளர் அசோக்க புஷ்பகுமாரவின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வினை கோணவத்தை பள்ளிவாசல்தலைவரும், ஓய்வுபெற்ற சமூக சேவை உத்தியோகத்தருமான எஸ்.எம்.எம்.அமீன்தலைமை தாங்கி நடாத்தியிருந்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ாபிர், பிரதேச சபையின் செயலாளர் எம்.ஐ.எம். பாயிஸ்மற்றும் ஓய்வு பெற்ற திட்டமிடல் பணிப்பாளர் ஐ.எல். தௌபீக் ஆகியோருடன் கிராம உத்தியோகத்தர் அஸ்லம்சஜா மற்றும் விவசாய அமைப்புகளின்

பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சுனமி அனர்த்தத்திற்கு பின்னர் சேதமைடைந்த கோணாவத்தை கொட்டுப்பாலத்தில் சிறியளவில் புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை மக்களின் முறையாக போக்கு-வரத்துக்குப் பொருத்தமானதாக அமையப்பெற்றிருக்கவில்லை.

அத்துடன் கொட்டுப் பாலம் - ஆற்றின்நீரோட்டத்துக்குத்தடையாக அமையப்பெற்றதுடன், பாலத்தினைச் சூழவும் நீர்த்தாவரங்கள் விளைந்து காணப்பட்டது. இதனால் பிரதேசவிவசாயிகளும், மீனவர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டதனால் நீர்ப்பாசன , விவசாய திணைக்களங்கள் இணைந்து பாலத்தின் 10அடி அகலமாக பகுதியை முற்றாக அகற்றியிருந்தனர்.

இதானல்இங்குள்ள மக்களின் போக்குவரத்துமுற்றாகதடைப்பட்டது. இவ்வாறானபலஅசௌகரியங்களுக்கு முகம்கொடுத்த மக்களின் போக்கு-வரத்துத் தேவை இன்றைய தினம் நிறைவேறுவதற்கான ஆரம்ப நிகழ்வு கோணாவத்தை பாலத்தின் முன்றலில் இடம்பெற்றிருந்தது.

கோணவத்தை பாலத்தின் நிர்மாணப்பணிகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் பூரண மேற்பார்வையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்ததக்கது.

## கஜேந்திரகுமார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்ததை இருவர் தமது அலைபேசியில் காணொலியாகப் பதிவு செய்துகொண்டிருந்தனர்.

இதைக் கண்டதும் நாடாளு மன்ற உறுப்பினரின் ஆய்வு உதவியாளர் அந்த இருவரிடமும் சென்று, நீங்கள் யார், எதற்காக காணொலிப் பதிவுகளைச் செய்கிறீர்கள் என்று வினவியுள்ளார். தமது விவரங்களை வெளியிட மறுத்த அந்த இருவருக்கும் ஆய்வு உதவியாளருக்கும் இடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் கவரப்பட்ட ஏனையவர்கள் அந்த இடத்தில் குழும இரு தரப்பினருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

ஒருகட்டத்தில்அவர்கள்தங்களை அரச புலனாய்வாளர்கள் என்று கூறியுள்ளனர். அதனை நிரூபிப்பதற்கு வேண்டிய அடையாள அட்டையைக் காண்பிக்கும்படி நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் அவர்களிடம்வலியுறுத்தியுள்ளார். ஆனால் அவர்கள்அதைச்செய்யவில்லை. இதனால் வாய்த் தர்க்கங்கள் இருதரப்பினருக்கும் இடையில் முற்றிய நிலையில் தம்மைப் புலனாய்வாளர்கள் என்று அடையாளப்படுத்திய இருவரில் ஒருவர் திடீரென நாடாளுமன்ற உறுப்பினரைத் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.

இதனால்ஆத்திரமுற்றமற்றையவர்கள் எஞ்சிய நபரைச் சுற்றிவளைத்துள்ளனர். தாக்கிவிட்டு ஓடிய நபர் அங்கு வரும்வரை அவரை விடுவிக்கமுடியாது என்றும் தெரிவித்துள்ளனர். அந்த நபர் உடனடியாக பொலிஸாருக்குத் தொலைபேசிஅழைப்பெடுத்துப் பேசியுள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில் அருகில் இருந்த பாடசாலையென்றினுள் இருந்து பொலிஸ் சீருடையிலும் பொலிஸ் சிவிலுடையிலுமாக வந்த இருவர் என்ன ஏது என்று விசாரித்துள்ளனர்.

முன்னணியினர் மடக்கி வைத்திருந்த நபர் அரச புலனாய்வாளர் என்று கூறி அவரைவிடுவிக்குமாறு தெரிவித்துள்ளனர். தப்பியோடியவர் வராமல் அவரை விடுவிக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டதும் மோசமான வார்த்தைகளால் திட்டியுள்ளனர்.

அப்போதுஒருவர்தன்னிடமிருந்தபிஸ்ரலைத் தூக்கி நாடாளுமன்ற உறுப்பினரின் முகத்துக்கு நேரே நீட்டி மடக்கிவைத்திருக்கும் நபரை உடனடியாக விடுவிக்கவேண்டும் என்று மிரட்டியுள்ளார். இந்தச் சமயத்தில் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் அங்கு வருகை தந்தார். ஏ.ஜயதிஸ்ஸ என்று அவர் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். தானே அந்தப் பகுதிக்கான பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி என்றார்.

அவரும்முன்னணியினர்மடக்கிவைத்திருக்கும் நபர் அரச புலனாய்வாளர் என்றும் அவரை விடுவிக்கும்படியும் வலியுறுத்தினார். அந்த இருவரும் இப்படித் தவறாக நடந்துகொண்டதற்காகத் அவர்களுக்குத் தண்டனை இடமாற்றம் வழங்குவார் என்றும் இந்தப் பிரச்சினையை இணக்கப்பாட்டுடன் முடித்துக்கொள்ளலாம்என்றும்தெரிவித்தார். ஆனால் முன்னணியினர் அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டனர். தாக்கிவிட்டுத் தப்பியோடிய நபரைக் கொண்டு வந்து அடையாளப்படுத்தும் வரைக்கும் மடக்கி வைத்திருந்த நபரை விடுவிக்க முடியாது என்று தெரிவித்தனர். இதனால் அங்கு மீண்டும் தர்க்கமான சூழல் எழுந்தது.

இதையடுத்து பொலிஸ் நிலையத்திற்கு வந்து இது தொடர்பில் முறைப்பாடு வழங்குமாறும் சப் இன்ஸ்பெக்டர் ஜயதிஸ்ஸ நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தார். இந்தச் சம்பவத்தின் மூலம் தனது நாடாளுமன்றச் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்று தெரிவித்து, அதற்குரிய நடவடிக்கையை எடுப்பேன் என்று கூறிய பின்னர் தடுத்து வைத்திருந்த நபரை விடுவித்து அங்கிருந்து புறப்பாட்டார் கஜேந்திரகுமார் – என்றனர்.

சம்பவம் குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தான் தாக்கப்பட்டது உண்மை என்று உறுதிப்படுத்தினார். அத்துடன் தன்னை நோக்கி பிஸ்ரல் நீட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

"அருகிலிருந்த பாடாசலையில் இருந்து வந்த இருவர்நாம்தடுத்துவைத்தருந்தநபரை விடுமாறு கோரி மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தினர். அதற்குள், ஒருவர் என்னைத் துப்பாக்கியால் இலக்குவைத்து தடுத்து வைக்கப்பட்டுள்ள நபரை விடுவிக்குமாறு கோரினார்" என்றார் அவர்.

# கட்டாக்காலி மாடுகள் இன்று வவுனியாவில் பிடித்தடைப்பு



வவுனியாவில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக வீதிகளில் நடமாடித் திரிந்த 26 கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு வவுனியா மாநகர சபை வளாகத்தில் அடைக்கப்பட்டது.

நேற்றயதினம் (01.06) இரவு வவுனியா பண்டாரிக்குளம் மற்றும் வைரவர்புளியங்குளம் ஆகிய பகுதிகளில் இருந்து குறித்த மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாடுகளின் உரிமையாளர்கள் 2 ஆயிரம் ரூபாய் தண்டப்பணத்தினை மாநகரசபைக்கு செலுத்தி அவற்றை மீளவும் பெற்றுக்கொள்ளமுடியும் என மாநகசபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(100)

# பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கையாளுதல் தொடர்பில் வழிகாட்டல்கள்

(பாறுக் ஷிஹான்)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய நிலையத்தின் ஏற்பாட்டில் பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைக் கையாளுதல் தொடர்பில் அரசாங்கத்திற்கு மற்றும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு சிபார்சு செய்யும் வழிகாட்டல்கள் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று (வியாழக்கிழமை) ஆரம்பமானது.

இந்நிகழ்வு கல்முனை பிராந்திய மனித உரிமைஆணைக்குழுவின் மண்டபத்தில் கல்முனை பிராந்திய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி ஏ.சி அப்துல் அஸீஸ் தலைமையில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.





இதன் போது அங்கு கருத்து தெரிவித்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் –

பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைக் கையாளுதல் தொடர்பிலான ஆணைக்குழுவின் வழிகாட்டல்கள் தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாக்கும் எனக் குறிப்பிட்டதுடன் பிராந்திய மட்டத்தில் ஆணைக் குழுவால் வெளியிடப்பட்ட குறித்த வழிகாட்டல்களை அறிமுகப்ப டுத்துவதுடன் இது பற்றிய அபிப்பிராயங்களைப் பங்குபற்றுநர்களிடமிருந்து பெற்று அதனை ஆணைக்குழு உள்வாங்குவதேயாகும்.

எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2022 ஆம் ஆண்டில் எமது நாட்டில் இடம்பெற்ற பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்ததுடன் இந்த ஆர்ப்பாட்டங்களின் போது நிகழ்ந்த மனித உரிமைகள்

மீறல்களுக்கு எதிராக விசாரணைகளை நடத்தியுள்ளது எனவும் அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளபடி அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது மனித உரிமையைப் பாதுகாப்பதற்கும் எதிர்காலத்தில் அத்தகைய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதைத் தவிர்ப்பதற்கும் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறும் அதிகாரம் இருப்பதால் ஆணைக்குழு இந்த வழிகாட்டல்கள் மூலம் அப்பணியைச் செய்கிறது என குறிப்பிட்டார்.

இதில் பங்குபற்றுநர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது –

அமைதியான முறையில் எதிர்ப்பை தெரிவிப்பதற்கான உரிமை வன்முறையைப் பிரயோகிப்பதன் மூலம் அனுபவிக்க முடியாது. இது அரசியல் அமைப்பின் அடிப்படை உரிமை உறுப்புரை பதினாளில் பாதுகாப்பளிக்கப்படுகிறது என்பதால் சகல கூட்டங்களின் மீதும் அரசு ஒரு கண்–மூடித்தனமான முழுமையான தடைகளை விதிக்கக்கூடாது என்பதுடன் அந்தக்கூட்டம் அமைதியான முறையில் நடைபெறுமாக இருந்தால் அதற்கான பாதுகாப்பு வழங்க வேண்டியது அரசின் கடற்பாடாகவுள்ளது எனவும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது இரு குழுக்களிடையே பதற்றமும் கடுமையான வாக்குவாதங்களும் ஏற்படுவதற்கான வெறும் சாத்தியம் ஒரு கூட்டத்தை தடைசெய்யும் வகையில் நியாயப்படுத்துவதற்கு போதுமான ஓர் ஆதாரம் அல்ல என்பதைப் பாதுகாப்புத் தரப்பினர் விளங்கிக் கொள்ள வேண்டும்.



ஆர்ப்பாட்டங்களின் போது அரசியல்வாதிகளின் தூண்டுதலின் காரணமாக நடத்தப்படுகின்ற வன்முறைகளால்தான் அதிக மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதால் பொலிஸார் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக அந்தந்த நேரத்தில் சில செயற்பாடுகளைச் செய் கின்ற போது ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிரிக ளாகக் கருதப்பட்டு பொலிஸாரைத் தாக்குகின்ற சம்பவங்களும் நடந்தேறியுள்ளது. சட்டத்தையும் நீதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய தார் மீகப் பொறுப்பு பொலிஸாருக்கு இருந்தாலும் ஆர்ப்பாட்டக்காரர்களை முன்கூட்டியே அச்சுறுத்தி அவர்களது தகவல்களைப் பெற்று அமைதியான ஒன்றுகூடலைத் தடுக் கும் அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அரச அலுவலர் ஒருவர் தனிப்பட்டவிடுமுறையியைஎடுத்துமக்கள்கருத்துக்கு மதிப்பளித்து கலந்து கொள்கின்ற போது அவரை நிர்வாக ரீதியாகப் பழிவாங்கக் கூடாதென வும் ஆர்ப்பாட்டங்களின் போது பெண்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர் எனவும் பாரிய ஆர்ப்பாட்டத்தின் போது சுதந்திரமாக கண்காணிக்கும் குழுக்கள் நியமிக்கப்படவேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்தனர்.

இந்நிகழ்வின் போது பொலிஸ் அதிகாரிகள் சுகாதாரத் துறை அதிகாரிகள் கல்வித் திணைக்கள அதிகாரிகள் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட சிவில் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (05)

# கல்வி, சுகாதாரம், தொழில்நுட்ப மேம்பாடு பற்றிய கலந்துரையாடல்

## மலையகத்தில் நடந்தது

உலகில் முன்னணி சேவை நிறுவனங்களுள் ஒன்றான பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ஊடாக, மலையகத்தில் கல்வி, சுகாதாரம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலொன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்

பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் அமைச்சில் நடைபெற்றது.

பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் தலைமை அதிகாரிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க, பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் பாரத் அருள்சாமி, அமைச்சரின் ஆலோசகர் ஹரித்த விக்ரமசிங்க, பிரத்யேக செயலாளர் மொஹமட் காதர் ஆகியோரும் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.





பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ஊடாக இலங்கையில் முன்னெடுக்கக்கூடிய வேலைத் திட்டங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் சிறார்களுக்கான போசாக்கு உணவு, சுகாதார மேம்பாடு மற்றும் நவீன தொழில்நுட்பங்களை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், நீர்வழங்கலை டிஜிற்றல் மயமாக்குதல் உள்ளிட்ட சில விடயங்கள் பற்றியும் இரு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர்.

தலைமையகம் ஊடாக கலந்துரையாடி, முன்னேற்றகரமான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என அதிகாரிகள் அமைச்சரிடம் இதன்போது உறுதியளித்தனர். (05)

# கல்வி அமைச்சரைச் சந்தித்துள்ளார் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்





(எப்.முபாரக்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும்,கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோருக்கிடையிலான சந்திப்பு கல்வி அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

இதன் போது கிழக்கு மாகாணத்துக்கு ஆசிரியர் பற்றாக்குறை என்பது மிகப்பெரும் சவாலாக உள்ளது. அதனை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்பது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் கல்வி அமைச்சரிடம் கோரிக்கையாக விடுத்தார்.

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முதற்கட்டமாக எதிர்வரும் கிழமைக்குள் கிழக்கு மாகாணத்தில் 500 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களை சேவையில் இணைத்துக்கொள்வதுடன் மீதிப் பற்றாக்குறையை மூன்று முதல் நான்கு மாதங்களுக்குள் நிரப்புவதற்கு திட்டமிடபட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண ஆளுநரிடம் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரும் கலந்து கொண்டனர். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அவமதிக்கப்படும் தமிழ் மக்கள் பிரதிநிதிகள்

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் இன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவமரியாதை செய்யப்பட்டிருக்கிறார். அதுவும் அரச காவல்துறை அதிகாரிகளால் அவர் அவமதிக்கப்பட்டிருக்கிறார். இது மிகவும் கண்டிக்கத்தக்கது. தடுத்து நிறுத்தப்படவேண்டியது. அனுமதிக்கப்பட முடியாது.

இதேபோன்றதொரு அவமரியாதையைக் காவல்துறையினர் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒருபோதும் செய்யமாட்டார்கள். அப்படிச் செய்வதற்கான துணிபு ஒருபோதும் அவர்களுக்கு இருப்பதில்லை. அந்தளவுக்கு மரியாதையும் பயத்தையும் தமது சிங்கள மக்கள் பிரதிநிதிகள் மீது வைத்திருக்கக்கூடிய காவல்துறையினர், தமிழ் மக்கள் பிரதிநிதிகளை அவமரியாதை செய்வதும் அவர்களைக் கிள்ளுக் கீரைகள் போன்று நடத்துவதும் மிக மோசமானதொரு நடைமுறை.

போர் நடந்தபோதும் சரி அதன் பின்னரும் சரி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்படி அவமரியாதை செய்யப்படுவது தொடர்கின்றது. இதுவே தமிழர்கள் இந்த நாட்டின் இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படுகின்றார்கள் என்பதற்கான பெரும் சாட்சி.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இங்கே அவமரியாதை மட்டும் செய்யப்படவில்லை. அவரது கூற்றுப்படி அவர் தாக்கப்பட்டிருக்கிறார் அதற்கும் மேலே துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டும் உள்ளார். இத்தகு துணிச்சலை காவல்துறையினருக்கு யார் கொடுத்தது? அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்று தெரிந்தும் அவரைத் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தும் தகைமையை எந்தப் பின்னணி அவர்களுக்குக் கொடுத்தது.

ஒரு மக்கள் பிரதிநிதிக்கு மரியாதை செலுத்தி அவரைப் பாதுக்கவேண்டிய முழுப் பொறுப்பையும் கொண்டிருக்கக்கூடிய காவல்துறையினர் அவரை அவமதித்தது மட்டுமன்றி, அதனைக் கைவிட்டுச் சமரசம் செய்துகொள்ளுமாறு சீருடையில் வந்த ஒரு காவல்துறை அதிகாரி தெரிவித்துள்ளார். ஒரு மக்கள் பிரதிநிதியை அவமதித்தது மட்டுமன்றி, அதனைச் செய்தவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்குப் பதில் அந்தப் பிரச்சினையைக் கைவிடும்படி ஒரு சிங்கள மக்கள் பிரதிநிதி முன்பாக இந்த அதிகாரிகளால் கேட்க முடியுமா? கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரவில்லை என்பதற்காகவே தண்ணில்லாக் காட்டுக்குத் தூக்கி வீசிவிடக்கூடிய சிங்கள அரசியல்வாதிகள் சப்த நாடிகளும் ஒடுங்கி நிற்கக்கூடிய அதிகாரிகள், தமிழ் மக்கள் பிரதிநிதிகளை மட்டும் கிள்ளுக் கீரையாக நடத்துவது இனப் பாகுபாட்டு நடவடிக்கையன்றி வேறென்ன?

இந்த அவமதிப்புக் குறித்து நாடாளுமன்றத்தில் சபாநாயகரிடம் முறையிட்டாலும்கூட அதற்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்குப் பதில் அவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளே எடுக்கப்படும் என்கிற பாதுகாப்பே அதிகாரிகளுக்கும் இத்தகைய செயல்களைச் செய்யும் துணிபைக் கொடுக்கிறது. இது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

அரசுத் தலைவர் இது விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு இந்தச் சம்பவத்தில் தொடர்புபட்டவர்கள் அனைவரையும் உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்துவதுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவும் வழிப்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் அவர் கூறும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அவர் ஆகக் குறைந்த அக்கறையை யாவது கொண்டிருக்கிறார் என்று நம்ப முடியும்.

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு கல்முனையில் உலருணவு பொதி வழங்கல்










(பாறுக் ஷிஹான்)

இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் ஏற்பாட்டில் சேவா இன்டர்நேனல் பவுண்டேசன் அமைப்பின் அனுசரணையில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் வாழும் பெண் தலைமை தாங்கும் 73 குடும்பங்களுக்கான உலர் உணவு பொருள்கள் நற்பிட்டிமுனை சுமங்களி மண்டபத்தில் இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் கல்முனை பிரதேச பொறுப்பாளர் ஜே.ஆர் . தர்மராஜ் தலைமையில் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலக உத்தியோகத்தர் ஏ.அமலதாசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். சிறப்பு அதிதியாக சமாதான நீதிவான் எஸ்.சண்முகநாதன், நற்பிட்டிமுனை பல நோக்கு கூட்டுறவு சங்க தலைவர் சிறிவேல்ராஜா, இரா.குணசிங்கம், நற்பிட்டிமுனை சமய செயற்பாட்டாளர் வி.சிசுபாலன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் நற்பிட்டிமுனை அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி மோகன் ஜெனிதா, நற்பிட்டிமுனை வர்ண கடை உரிமையாளர் ப.கேமதர்சன், இந்து இளைஞர் மன்ற உறுப்பினர் அஸ்நீதன் இந்து ஸ்சுயம் சேவக சங்க அம்பாறை மாவட்ட செயலாளர் வரதராஜன் , சுயம் சேவக உறுப்பினர்களான துலக்சன், காந்தன், உறுப்பினர்கள் துசாந் ஆகியோர் கலந்துகொண்டு வருகை தந்த 73 பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான நிவாரண உதவிகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கடற்கரையில் தென்னை மரங்களை நடும் நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)



மரநடுகை செயற்திட்டம் இரண்டாம் கட்டத்தின் கீழ் பயன்தரு தென்னை மரங்களை நட்டு கடலரிப்பைத் தடுத்து மருதமுனை கடற்கரையின் அழகைப் பேணுவோம் எனும்தொனிப்பொருளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மற்றும் திங்கட்கிழமை காலை தொடர்ச்சியாக மருதமுனை கடற்கரை லைட் ஹவுஸ் அருகில் இடம்பெற்றது.

பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அப்துல் கபூர் தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப்பின் கல்முனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிற்கான இணைப்பாளர் பி.எம். முகம்மட் ஜஃபரின் ஏற்பாட்டில் மருதமுனை கடற்கரைப் பிரதேசத்தில் இடம்பெற்றது. இதன் போது மருதமுனை பகுதியை நேசிக்கின்ற பல்வேறு சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் பசுமைப்புரட்சியை ஏற்படுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முாரப்பால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு மில்லியன் மரங்களை நடும் வேலைத் திட்டத்தின் கீழ் இவ்வாறு மருதமுனை பகுதி கடற்கரை பிரதேசத்தை கடல் அரிப்பிலிருந்து தடுப்பதற்கும் கடற்கரையின் அழகைப் பேணுவதற்குமாக தென்னை மரங்கள் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இதன் முதல் கட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முாரப்பால் மருத முனை பகுதி கடற்கரையில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் மரங்களை வளர்க்கும் மனங்களை வளர்ப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் எதிர் வரும் ஐந்து வருடத்திற்குள் 10 லட்சம் மரங்களை அம்பாரைற மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலும் நடுவதற்கான நோக்கோடு இந்த வேலைத்திட்டம் இடம்பெற்று வருகின்றது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அட்டாளைச்சேனை, இறக்காமம், திருக்கோவில், நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, மருதமுனை, பானம, அக்கறைப்பற்று, சாய்ந்தமருது, பாலமுனை, ஒலுவில், நாவிதன்வெளி, மாவடிப்பள்ளி,வரிப்பத்தான்சேனை ஆகிய பிரதேசங்களில் இந்த வேலைத்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

வீடுகள், பொது இடங்கள், கடற்கரைப் பிரதேசங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மத ஸ்தாபனங்கள், வயல் காணிகள் உள்ளிட்ட சகல இடங்களிலும் பொதுமக்களின் பங்களிப்புடன் இந் தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (05)

# ‘கவிநயம் சுடர்மணி’ இந்திய விருதுக்கு கலாபூணம் ஸக்கியா சித்திக் பரீட்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இந்திய திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப்பட்டி, பசுமைவாசல் பவுண்டேன் நடாத்திய கோடைக்கால 'நட்சத்திர சுடர் மணி - 2023' விருதுகள் போட்டியில், கவிதைப் பிரிவில் இலங்கையிலிருந்து பங்கு பற்றி சிரேஷ்ட எழுத்தாளரும், ஆசிரியரும், கவிஞருமான கலாபூசணம் ஸக்கியா சித்திக் பரீட், 'கவிநயம் சுடர் மணி' விருதைத் தட்டிக் கொண்டார்.

இந்திய பசுமை வாசல் பவுண்டேன் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக சமூகப்பணி, இலக்கியப் பணி, இயற்கைப் பணி எழுத்துப்பணியில் ஈடுபட்டு வருகின்ற பல்துறை சாதனையாளர்களுக்கு தொடர்ந்தும் பல தலைவர்களின் பேரில் பிறந்த நாளுக்கு

விருதுவழங்கிவருகிறது.அந்தவகையில், கோடைகாலத்தில் தங்களது திறமைகளை வெளிக்கொணர்ந்துஅவர்களின்படைப்புகளின் தன்மைகளைவெளிக்கொணரவும்கோடை காலத்தில் முடங்கிக் கிடந்தவர்களின் படைப்பாளிகளை உலகறியச் செய்யவும் கதை, கவிதை, கட்டுரை, ஓவியம் ஆகிய போட்டிகளை நடத்தியது. இதில் 600 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தங்களுடைய திறமைகளை வெளிக் காட்டியிருந்தனர். சிரேஷ்ட எழுத்தாளரும் கவிஞருருமான கலாபூசணம் ஸக்கியா சித்திக் பரீட், இதுபோன்று இன்னும் பல சாதனைகள் படைக்க வேண்டும் என்று இலக்கிய சமூகம் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. (05)